திராவிடநாடு

17—6—62 | வார வெளியீடு | விலை 16 காசு

தடைதான் உண்டோ?

[சா. சதாசிவம்]

முல்லைமலர் சிரிப்பதற்கும் முகில்விடுத்து
முத்துநிலா ஒளிர்வதற்கும் தடைதான்உண்டோ?
சில்லென்று தவழ்ந்துவரும் மாருதத்தை
நில்லென்று ஆணையிட்டுத் தடுப்பவர்யார்?
கலகலத்துச் சதிராடும் அருவிதன்னைக்
கணப்பொழுதில் நிறுத்திவிட இயலுமோதான்
மலைமுகட்டில் நின்றவண்ணம் குடைபிடித்தால்
மழைநீர்தான் பெய்யாமல் நின்றுபோமோ?

பூ,மலரும் காய்,கனியும் அலைமுழங்கும்
பூட்டுகிறேன் விலங்கென்றால் மாறிப்போமோ?
தேமதுரத் தமிழோசை இன்பமூட்டும்
தெளிவற்ற செவிடர்க்கு என்னகேட்கும்?
கூம்பிவிட்ட தாமரையா நாட்டுப்பற்று?
கூர்வேலின் ஒளிமின்னல்! புனல்பெருக்கு!
நாம்கேட்கும் நமதுரிமைத் திராவிடத்தை
நாடாள்வோர் தடைபோட்டு உடைப்பதெங்கே?

மாறுபட்ட இனச்சிறப்பும் மன்பதைக்கும்
மறுமலர்ச்சிக் குறள்கொடுத்த பீடும்பெற்று
வேறுபட்டுத் தனித்திலங்கும் திராவிடத்தின்
வீறுகொண்ட விடுதலைத்தீ அணைவதெங்கே?
கூறுபோட விடமாட்டேன் என்றுவீணே
குரல்கொடுத்து உரிமைதனை மறுப்பதாலே
ஏற்றிருக்கும் இலட்சியங்கள் அழிந்தாபோகும்?
எழில்நிலவைத் திரைபோட்டு மறைப்பதுண்டோ?

தமிழாக்கம்: **கனகு**

ஆஸ்திரேலியாவின் அபூ

ஆஸ்திரேலியாவின் பொருள் வளம் இன்று ஆரவாரத்தோடு செழித்தோங்கி வளர்ந்துயர்ந்து, கொழித்துக்கொண்டு நிற்கிறது. ஆனால், அந்தக்கொழிப்பு அந்நாட்டு—அந்தக் கண்டத்துப்—பழங்குடி மக்களோடு எவ்வித ஒட்டுறவும் கொள்ளாத கொழிப்பு. அந்தச் செழிப்புக்கும், கொழிப்புக்கும் ஆங்குள்ள பழங்குடி மக்களுக்கும் எந்தத் தொடர்புமே கிடையாது. அவர்கள் அங்கு நச்சுப் புழுக்களாகக் கருதப்படுகின்றனர். தீய விலங்குகளாக எண்ணப்படுகின்றனர். அந்தக் கண்டத்தில் பெரியதொரு வளமான சமுதாயம், உருவாக்கப்பட்டுவிட்டது என்னவோ உண்மைதான். ஆனால், அந்தச் சமுதாயம் ஆங்குள்ள பழங்குடி மக்களை வெறுத்து, ஒதுக்கித் தாழ்த்தி வைத்திருக்கிறது. அவர்களின் எதிர்காலத்தை இருட்டடித்து வைத்திருக்கிறது. வாழ்க்கையைப் பற்றிய நம்பிக்கையே அவர்களிடம் இல்லாதபடி செய்திருக்கிறது.

அந்தப் பழங்குடியினர் அபூ என்று அழைக்கப்படுகின்றனர்—ஆஸ்திரேலியாவின் அபூ என்று வேடிக்கையாக. அவர்கள் இந்த நூற்றாண்டில்தான் வெள்ளையரின் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாகாமல் தப்பித்துக்கொண்டிருக்கிறார்கள். என்றாலும் அந்த இன்றைய நிலை, வெள்ளையர் அவர்களைப்பற்றி உள்ளது உள்ளபடி உணர்ந்துகொண்டுவிட்டார்கள் என்று உணர்த்துவதாயில்லை. அவர்கள்பால் வெள்ளையர் இரக்கம் காட்டுகிறார்கள் என்று சொல்வதாயில்லை.

மனித இனமே வருந்த வேண்டும் நிலையில் அபூ இன்று வாழ்கிறான். தாழ்வுக்கும் தாழ்வில், கேவல வாழ்வுக்கும் இழிந்த வாழ்வில் அவன் வாழ்கிறான். அவனுக்கு உயர்வு கொடுக்கக்கூடியது ஏதேனும் ஒன்று உண்டு என்று சொல்ல வேண்டுமானால் அது சாவு ஒன்றுதான்.

ஓயாது ஒழியாது அவனைச் சுற்றிச் சுற்றி மொய்த்துக்கொண்டிருக்கும் ஈக்கூட்டம்கூட அவனை நிம்மதியாக இருக்க விடுவதில்லை. அது அவனைத் தொடர்ந்த வண்ணமே இருக்கும். மொய்த்தவாறே இருக்கும். அந்தக் காட்சி ஒன்றே அவன்படும் சித்திரவதையை எடுத்து விளக்கப் போதிய காட்சி. ஈக்கூட்டம் மொய்க்க மொய்க்க அவன் வாழ்கிறான்; அது பிடுங்கித் தின்னத்தின்ன அவன் வாழ்கிறான். ஐயோ, வாழ்வா அது! அவன் அந்த ஈக்கூட்டத்திடையே உணர்வோடு இருப்பது ஒருபுறமிருக்கட்டும், — உயிரோடு இருக்கின்றானே, அது விந்தை! விந்தையிலும் விந்தை! எண்ண முடியாதது அவன் வாழ்கின்ற தாழ்ந்த வாழ்வு. எண்ணவே ஒண்ணாதது அவன் எய்திக்கிடக்கும் இழிந்த நிலை.

குப்பை கூளத்தின்மீது அபூ குந்தி அமர்கிறான். அங்கே மொய்க்கின்ற ஈ அவனைக் கருமையிலும் கருமையாக்கிக் காட்டுகின்றது. அவன் எழுகிறான். அந்த ஈக்கூட்டம் நிலாவட்டக் குடைபிடித்தாற்போல் அவனோடு மேலெழும்பிக் கவிந்து நிற்கின்றது. அவன் நடக்கிறான். அப்போது அந்த ஈக்கூட்டம் அவனோடு ஒன்றிவிடுகிறது. அவனிடம் மட்டுமா அந்த ஈக்கூட்டம் தன் கொடுக்கு வித்தையைக் காட்டுகின்றது! அவன் அன்புடன் வளர்க்கும் சேய்களிடம்; அவன் காலொடு கால் பின்னிச் செல்லும் நாய்களிடம். ஆக எல்லாரிடமும்தான்.

பன்றிக் குடிசிலிலும் கேவலமானது அவன் குடியிருப்பு. அது கிழிந்த கோணிகளால் பழைய தகடுகளால் ஆக்கப்பட்டது. அதன் வாயிலோ பொந்தின் அளவினது. முடிவே இல்லாத ஈத்தொல்லை அங்கும் இல்லாமல் இல்லை. எனினும் அந்தக் குடில் வெயிலுக்கு அடக்கமாக அமைந்துள்ளது. நன்மை அவ்வளவுதான். அந்தக் குடிலைச் சுற்றிலும் பின்னும் ஒரு முப்பது குடில்கள். அது அந்த அபூவின் சமுகம்.

ஆஸ்திரேலியாவில் வெள்ளையர் முதன் முதல் அடியெடுத்து வைத்த போது, அங்கே அலைந்து திரியும் கூட்டமாக அபூக்களிருந்தனர்—ஏறத்தாழ ஐந்து இலட்சம் பேர்.

வெள்ளையர் வளர்த்த விலங்குகள் அபூக்களுக்கு எளிதில் கிடைக்கும் வேட்டைப் பொருள்களாக மாறின. அது கண்டு சீற்றங்கொண்டான் வெள்ளையன். எடுத்தான் துப்பாக்கியை. அவன் துப்பாக்கிக்கு அபூக்கள் எளிதில் கிட்டிய வேட்டைப் பொருள்களாயினர்.

அபூ மக்களைச் சுட்டுச் சுட்டு வீழ்த்துவதே தன் வேலையாக எடுத்த எடுப்பில் கொண்டிருந்தான் வெள்ளையன். போகப் போகச் சுட்டு வீழ்த்தும் வேலை அவனுக்கு அலுப்பைத் தந்தது. துப்பாக்கியின் வேகம், அது பாய்ச்சுகின்ற குண்டுகளின் வேகம் அவனுக்கு மிக மிகக் குறைந்த வேகமாகத் தென்பட்டது. அப்போது அபூக்களை விரைந்து அழிப்பதற்கு வெள்ளையர் வேறொரு மார்க்கத்தைக் கையாண்டனர். விலங்குகள் என வாழ்ந்த அந்தப் பழங்குடி மக்கள் குடிப்பதற்குப் பயன்படுத்தும் நீர்ச்சுனைகளில், கொடுமனம் படைத்த வெள்ளையன் நஞ்சினைக் கலந்தான். அந்தோ, அந்த மாபாதகச் செயல் வெள்ளையன் எதிர்பார்த்த பலனை நல்கத்தான் செய்தது. டாஸ்மானியா என்ற பகுதியில் வாழ்ந்து வந்த பழங்குடி மக்கள் ஒருவர்கூட எஞ்சாமல் அவ்வளவு பேரும் அழிந்தொழிந்து போயினர். மற்ற முக்கிய பகுதிகளில் வாழ்ந்துவந்தோரின் தொகை ஐம்பதாயிரமாகக் குறைந்தது. அந்த ஐம்பதாயிரம் பேரும் கூட மாந்தர் வாழத் தகுதியற்ற பகுதிகள் நோக்கித் துரத்தப்பட்டனர்.

இன்று அபூ இன மக்களின் தொகை எண்பதாயிரம். அந்த எண்பதாயிரம் மக்களும் ஆஸ்திரேலியர் எனப் பெயர் பெற்றுவிட்ட வெள்ளையரின் மனச்சான்றில் ஊசலாடிக் கொண்டிருப்போராவர். இன்று அவர்கள் நகர்ப்புறத்தே கொட்டில்களில், சாவடிகளில் ஒண்டுக் குடிகளாகக் காலந்தள்ளுகின்றார்கள். அல்லது, அந்தப் புறநகர்ப் பகுதிகளில் அவர்களே அமைத்துக்கொண்ட சேரிகளில் வதிகிறார்கள். அந்த இரண்டு நிலைக்கும் அப்பாற்பட்டவர்களோ அந்த நாட்டில் பாலையாகக் கிடக்கும் வடமேற்குப் பகுதிகளில் அலைந்து திரிகிறார்கள்.

(14-ம் பக்கம் பார்க்க)

காஞ்சீபுரம்

17–6–'62.

தம்பி !

விந்தையான செய்தி இது என்று குறிப்பிட்டிருந்தேன், சென்றகிழமை; கவன
மிருக்குமே. ஏன் விந்தையான செய்தி என்கிறேன் என்ருல், தம்பி! தேசிய ஒருமைப்
பாடு உண்டாக்க, திருவிதாங்கூர் மட்டுமே தனி நாடாகி, தனி அரசு நடாத்தமுடியும்
என்று முழக்கமிட்டு ஏற்பாடுகளில் ஈடுபட்ட சி. பி. தாஞ, இந்தக் காரியத்துக்கு
அமர்த்தப்படவேண்டும் என்று எவரும் எண்ணத்தானே செய்வார்கள். நிலைமைக்கு,
அவரவர்கள் தத்தமது திறமைக்கு ஏற்ப விளக்கம், காரணம் காட்டுவார்கள்! நிரம்ப!!

ஆனுல், காங்கிரஸ் வட்டாரமேகூட, உள்ளபடி அதிர்ச்சி அடைந்திருக்
கிறது, சி. பி. தலைமையில் குழு அமைக்கப்பட்டது கண்டு.

சி. பி. இராமசாமி ஐயர், சோபாலசாமி ஐயங்கார்போல,
வெள்ளைக்காரன் இருந்த வரையில் அவனிடம் 'சேவகம்' பார்த்துவிட்டு,
சுயராஜ்யம் வந்ததும், அதிலே 'சேவகம்' பார்க்க வந்தவரல்ல. எஜமானர்
கள் மாறினுலும் ஊழியர் ஊழியரே என்ற தத்துவத்தைத் தடியாகக்
கொண்டு மேலிடம் நடந்தவர் அல்ல, சி. பி.

வேண்டாம் இனிப் பதவி என்று கூறிவிட்டு, வேதாந்த விசாரணையில் ஈடுபட்டவர்
அல்ல;

ஓய்வு பெற்ருலும், அவ்வப்பொழுது, நேருபிரானுக்குத் துதிபாடியபடி இருந்தால்,
ஏதாகிலும் கிடைக்கும் என்ற எண்ணத்துடன் 'நாமாவளி' பாடிடும் போககினரு
மல்ல, சி. பி.

எனக்கு ஏன்? இன்னமும் ஏன்? என்று உரத்தகுரலில் கேட்டுக்கொண்டே,
மெல்லிய குரலில், என்ன இலாகா? என்ன அந்தஸ்து? என்று கேட்கும் பசி நிறைந்த
வரும் அல்ல, சி. பி.

மகன், தில்லியில் மந்திரியாக வீற்றிருப்பதைக் காண்பவர்.

விடுதலை இயக்கத்தில் துவக்ககாலத்தில் ஈடுபட்டு, அன்னிபெசண்டு அம்மை
யாரின் அரசியல் அரவணைப்பிலே வளர்ந்து, நிர்வாகத் துறையில் நுழைந்து, நெரித்த
புருவத்தையும், நேர்த்தியான அறிவாற்றலையும் ஒருங்கே இணைத்து அரசோச்சியவர்.
காங்கிரசை நத்திப் பிழைத்தாகவேண்டிய நிலையில்லை. அவர் ஏன் அழைக்கப்பட்டார்?

இந்தப் பதினைந்து ஆண்டுகளாக உங்கள் தலைவர்களுக்குத் தெரியாததை சி. பி.
தெரிந்து கூறி, உமது தலைவர்களால் இதுநாள் வரையில் சாதிக்கமுடியாதுபோன
தேசிய ஒருமைப்பாட்டினை, சி. பி. சாதிக்கப்போகிருர் என்ரு அவரிடம் இந்தக் காரி

சூடும் சுவையும்

[4]

யத்தை ஒப்படைத்தீர்கள்? என்று கேட்கும்போது, காங்கிரசாருக்கு வேதனையாகவும் வெட்கமாகவும்தான் இருக்கிறது.

தேசிய ஒருமைப்பாடு கிடைத்திடக், காலமெல்லாம் உங்கள் போக்கை வன்மையாகக் கண்டித்துக் கொண்டிருந்த சி. பி. தானு அகப்பட்டார்! அவர் பிரிட்டிஷ் ஆட்சி முறையிலே இணைந்து இருந்தவராயிற்றே—கோஷன் பிரபுவைத் தலைவராகக்கொண்ட எனது சர்க்கார் என்று தர்பார்மொழி பேசியவராயிற்றே—கிளர்ச்சிகளை ஒடுக்க மிகக் கண்டிப்பான அடக்கு முறையை அவிழ்த்துவிட்டவராயிற்றே, பொதுமக்கள் இயக்கத் தொடர்பற்று, பதவியிலே பலகாலம் ஈடு பட்டுக் கிடந்தவராயிற்றே, அவரா, இந்தக் காரியத்துக்கு ஏற்றவர்? என்று கேட்கும்போது காங்கிரசாருக்கு வருத்தமாகத்தான் இருக்கும்.

உள்ளபடி சி.பி. என்னதான் எண்ணிக்கொள்வார். சதா கிளர்ச்சியிலேயே காலத்தைக் கடத்திவிட்ட காங்கிரசாருக்கு, பிரச்சினையை எப்படித் தீர்த்து வைப்பது என்று புரியவில்லை, முழக்கம் எழுப்பத் தெரியும், மூலை பாயத் தெரியும், சட்டம் மீறத் தெரியும், சத்யாக்ரகம் தெரியும், இராஜதந்திரப் போக்குத் தெரியாதே! பதினைந்து ஆண்டுகளாக எதை எதையோ செய்து பார்த்தார்கள், தேசிய ஒருமைப்பாடு காண; பலிக்கவில்லை; நாளுக்கு நாள் பிரிவினை கேட்கும் கழகம் வளரக் கண்டனர், என்ன செய்வதென்று புரியவில்லை; திகைத்துப் போய், ஐயனே! அபயம்! இந்த ஆபத்திலிருந்து எம்மைக் காப்பாற்றி அருளவேண்டும்!—என்று அழைத்து அஞ்சலி செய்தனர்—ஆயிரத்தெட்டுத் தவறுகள் செய்தவர்கள் என்றாலும், கெஞ்சிக் கூத்தாடும்போது என்ன செய்வது, 'சரி' என்று சம்மதம் கொடுத்தேன். பதினைந்து வருடம் அரசாண்ட பிறகு, இவர்களின் அரசு சாதிக்க முடியாமற்போனதை நான் சாதித்துக் கொடுக்கவேண்டி இருக்கிறது. எனக்கு ஆணவம் என்று ஆயிரம் தடவை ஆர்ப்பரித்தவர்கள் இந்தக் காங்கிரசார்; வெள்ளையனுக்குக் குலாம் என்று ஏசினுர்கள். பதவிப் பித்தம் என் தலைக்கு ஏறிவிட்டது என்று பரிகாசம் செய்தார்கள். நாட்டுக்குத் துரோகி என்று தாக்கினுர்கள். மக்களின் உரிமைக் குரலை அடக்கிடும் மாபாவி என்று சபித்தனர். அடக்கு முறையை அவிழ்த்துவிட்டவன்—டயர் போன்றவன் — என்றெல்லாம் கண்டித்தார்கள். சுயராஜ்யத்துக்காகக் காங்கிரஸ் பாடுபட்டபோது சுகவாசம் அனுபவித்துக்கொண்டிருந்த துரோகி என்று தூற்றினர். மக்களின் மனதை அறிந்துகொள்ளத் தெரியாத மமதையாளன் என்றனர். பத்தாம்பசலி, என்றனர். தியாகத்தின் மதிப்பு அறியாதவன், தேசப் பிதாவாம் மகாத்மாவையே மிரட்டியவன் என்றெல்லாம் ஏசினுர்கள்! அப்படிப் பட்டவர்கள், சுயராஜ்யத்துக்காகப் பாடுபட்டுத் தியாகத் தழும்பேறிய பல காங்கிரஸ்காரர்கள் இருக்க, அவர்களையெல்லாம் விட்டுவிட்டுத், தேசிய ஒருமைப்பாடு எனும் சிக்கல்மிக்க காரியத்தைச் சாதிக்க, என்னைத் துணைக்கு அழைக்கிருர்கள். ஏகாதிபத்தியக் கொலுப் பொம்மை என்று என்னைக் கேலி பேசினுர்கள், இன்று என்னிடம், தேசிய ஒருமைப்பாடு எனும் அடிப்படைத் துறை ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இத்தனைக்கும் நான் காங்கிரஸ் ஆட்சியாளர்களை, இந்திரனே! சந்திரனே! என்று அர்ச்சிப்பதுமில்லை. என் சுயமரியாதையை இழக்கச் சம்மதித்ததும் இல்லை. இவர்களைப் பற்றி நான் கொண்டுள்ள கருத்தை ஒளித்து வைத்ததுமில்லை; கண்டித்துப் பேசி இருக்கிறேன். என்றாலும் என்னைத்தான் அழைக்கிருர்கள். காலமெல்லாம் என்னைக் கண்டித்தவர்கள், கடைசியில் என்னைக் கைகூப்பி அழைக்கிருர்கள். பிரச்சினையைத் தீர்த்துவைக்கத் திறமை வேண்டாமா, தெளிவு வேண்டாமா, ஆராய்ச்சி வேண்டாமா, ஆற்றல் வேண்டாமா? இது என்ன, உப்புக் காச்சுகிற வேலைபோல எளிதானதா? அல்லது துணியைக் கொளுத்துகிற காரியமா? இராட்டை, தக்ளியா? இதற்குத் தேவை, தெளிவு, துணிவு; இதனை அவர்கள் எங்கே பெற்றிருக்கிருர்கள்? என்னை இவர்கள் ஏசியதை எண்ணும்போது எரிச்சலாகத்தான் இருக்கிறது என்ருலும், ஆண்டு பதினைந்தாகியும் இவர்களால் தீர்க்கப்பட முடியாத பிரச்சினையைத் தீர்க்கவல்லவன் நானே என்பதை உலகுக்கு இவர்களே அறிவிக்கிருர்களே, அது போதும். இவர்களுக்கு ஏற்ற தண்டனை! தூற்றினவர்கள் துதி பாடகர்களாவது சாதாரண சம்பவமா? சகலரும் சித்திக்கக்கூடியதா!! வரலாற்றிலே பொறிப்பார்களல்லவா, எந்தச் சி. பி. யைக் காங்கிரசார் மிகவும் கேவலமாகக் கண்டித்து வந்தார்களோ, அதே சி. பி-யை அழைத்துக் கொலுவில் இருக்கச்செய்து, அதே காங்கிரசார் தேசிய ஒருமைப்பாட்டுக்கு வழி காட்டச்சொல்லிக் கேட்கவேண்டி நேரிட்டது. தன்னை இழிமொழியால் ஏசின காங்கிரஸ்மீது பழிதீர்த்துக்கொள்வதுபோல, எந்தக் காங்கிரஸ் அவர்மீது பழி சுமத்திற்ரு, அதே காங்கிரசுக்குத் துணைபுரிய சி. பி. முன்வந்தது, வரலாற்றிலே பொறிக்கத்தக்க வியப்பான நிகழ்ச்சி என்றல்லவா பிற்காலச் சந்ததி பேசும். அதுபோதும்! வஞ்சம் தீர்த்துக்கொண்டேன். நான் அன்றுபோலவேதான் இருக்கிறேன் — வளைவு, நெளிவு, குழைவு, கும்பிடு, கிடையாது. எனினும் அவர்களாகவே அழைத்து, வழி காட்டச்சொல்கிருர்கள். வாழ்க்கையிலே நான் பெற்ற எல்லா வெற்றிகளைக் காட்டிலும் இதனை நான் மகத்தானதாகக் கருதுகிறேன் — இவ்விதமாகவெல்லாம் சி. பி. இராமசாமிஐயர் நினைத்தால் தவறில்லையே! இவ்வளவுக்கும் இடம்கொடுத்துவிட்டார்களே காங்கிரசார். ஏன்?

இதனை எண்ணி எரிச்சல்கொள்கிருர்கள் காங்கிரசிலுள்ளோர்.

காங்கிரஸ், காடுசுற்றியபோது கண்ணெடுத்தும் பாராது இருந்தவர்களுக்கெல்லாம் மந்திரிப்பதவி கொடுத்தார்கள் நமது தலைவர்கள்; சகித்துக்கொண்டோம்; தேசிய ஒருமைப்பாடு எனும் அடிப்படைக் காரியத்தை, நமது தேசியத்தையும் அதற்காக உழைத்தவர்களையும் மிகத் துச்சமாக மதித்துப் பேசியவரிடம், எதிர்த்தவரிடம் ஒப்படைக்கிருர்களே, அதனை எப்படிச் சகித்துக்கொள்ளமுடியும்—என்று நினைத்து வருத்தப் படுகிருர்கள் காங்கிரஸ் தொண்டர்கள்.

சி. பி. யை இழுத்துப் போட்டது, நமக்கு இழிவாகாது; அலசிப் பார்ததால் அது சி. பி. க்குத்தான் இழிவு. ஏனெனில் அவர் இந்திய அரசிலே திருவாங்

கூர் சேரமுடியாது, தனி அரசு ஆகிவிட்டது என்று ஆணவத்துடன் அறிவித்தவர், அப்படிப்பட்டவரே இப்போது இந்தியாவில் பிரிவினை கூடாது, அது பெருந் தீது என்று பேசி, அதன்படி காரியமாற்றப் போகிருர் என்ருல், அவர் அல்லவா சரணடைந்தார் என்று பொருள்? பிரிவினை பேசினவரைக் கொண்டே பிரிவினை உணர்ச்சியை ஒழிக்கச் சொல்கிறோம். மாபெரும் சாதனை அல்லவா அது. ஐயா! சி. பி! திருவிதாங்கூர் தனிஅரசு ஆகிவிட்டது என்று பேசி, இந்திய தேசியத்துக்கு வேட்டு வைக்கப் பார்த்தீரே! இப்போது, பிரிவினைக் கொள்கையை ஒழித்துக்கட்டும் வேலையை, நீரே அல்லவா செய்யவேண்டி வந்தது! துளியாவது எதிர்பார்த்திருப்பீரா? வரலாறு என்ன எழுதிக்காட்டும்? எந்தச் சி. பி. திருவிதாங்கூர் பிரிந்து தனிநாடு ஆகிவிடும் என்று முழக்கமிட்டாரோ, அதே சி. பி. திராவிடம் தனிநாடு ஆகவேண்டும் என்று கேட்பவர்களிடம், மன்ருட, வாதாட நியமிக்கப்பட்டார், பிரிவினையை விட்டுவிடுக என்று கேட்டுக்கொண்டார். திருவிதாங்கூர் தனி நாடு ஆகப் போராடிய வீரரை அப்போது முறியடித்தது மட்டுமல்ல, பல ஆண்டுகளுக்குப் பிறகு, அவரே பிரிவினைக் கொள்கையை அடக்கும் தளபதியாக நியமிக்கப்பட்டார். **மகாராஜா சம்பளம்** கொடுத்தபோது, தனிநாடு கேட்கும் **தளபதி** வேலை பார்த்**தார்,** நேரு அழைத்தபோது தேசிய ஒருமைப்பாட்டுக்கு வழி வகுக்கும் 'உத்யோகம்' பார்த்தார். சி. பி. யைச் சரியான முறையிலே பழிவாங்கிவிட்டார் நேரு—

இப்படிக் காங்கிரசார் வாதாடித், தமக்கு ஏற்பட்டுள்ள எரிச்சலைப் போக்கிக்கொள்ளக் கூடும்.

இரு தரப்பிலே, எவர் தரப்பு வாதமாயினும், அது கேலிக் கூத்தாகவே, நடுநிலையாளர்கட்குத் தோன்றும்.

தம்பி! காங்கிரசுக்கோ அல்லது சி. பி-க்கோ, முன்பு கொண்டிருந்த போக்கு நினைவிற்கு வருமானல், இப்போது ஏற்பட்டுள்ள 'கூட்டு' எவ்வளவு கேலிக்குரியது என்பது சுரிலெனப்படும்.

அவர்கள் கிடக்கட்டும், தம்பி! நீ தெரிந்துகொள், மறந்துபோயிருப்பவர்களுக்கும் எடுத்துச் சொல்லு, தேசிய ஒருமைப்பாடு காணக் குழுத் தலைவர் ஆகியுள்ள சி. பி. முன்பு பூண்டிருந்த கோலத்தையும், முழக்கிய வீராவேசத்தையும். நாம் திராவிடம் தனி நடாகத் திகழ வேண்டும், தனி அரசு நடாத்தவேண்டும் என்கிறோம், இன்று தனி அரசு நடாத்தும் எத்தனையோ நாடுகளை விடத் திராவிடம் அளவில் பெரிது, வளம் மிகுதியாகக் கொண்டது, மக்கட்தொகை எட்டுக்கோடிக்கு அதிகம்.

சி. பி. திருவிதாங்கூர் சமஸ்தானம் மட்டும், தனி நாடாக, தனி அரசாக இருக்கமுடியும்; இருக்க வேண்டும், இருக்கப்போகிறது என்று அறிவித்தவர்! அறிவிப்பா? பிரகடனம்!! திருவிதாங்கூர் சமஸ்தானத்து மக்கட் தொகை எவ்வளவு? 65 இலட்சம்; வருவாய் எவ்வளவு? 9 கோடி ரூபாய். இதற்குத் தனி அரசு உரிமை கேட்டவர், சி. பி.

நிலைமை **அவருக்குத் துணைசெய்யவில்லை; எனவே கடைசியில், திருவிதாங்கூர் இந்தியப் பேரரசிலே இணைந்தது. அது, வீராவேசமாகப் பேசியவர் காரியமாற்றமுடியாமல் தடுமாறிப்போனுர் என்பதனை எடுத்துக்காட்டுகிறது. அவர் மனம் மாறியதையோ, திருவாங்கூர் தனி நாடாக வாழமுடியாது என்ற உண்மையை உணர்ந்துகொண்டு தமது போக்கை மாற்றிக்கொண்டதையோ, காட்டுவதாக இல்லை. ஏனெனில்,** திருவிதாங்கூர் தனிநாடு ஆகவேண்டும் **என்பதற்காக** அவர் சொன்ன காரணங்களை, காட்டிய ஆதாரங்களை, சொத்தை சோடை, சத்தற்றது பொருளற்றது என்று அவர் பிறகு அறிவிக்கவில்லை. **நிலைமை சாதகமாக இல்லை, எனவே** போக்கை மாற்றிக்கொண்டார். **நிலை**யான போக்கிலிருக்க, அவருக்கு வாய்ப்பும் **இல்லை,** ஏனெனில், திருவாங்கூருக்கு அவர் திவான் **வேலை** பார்க்கப் போனவர்.

அவருடைய போக்கு எக்காரணத்தாலோ மாறி விட்டது—**அதுபற்றி நமக்குக் கவலை இல்லை. நாம் கவனிக்கவேண்டியது,** திருவாங்கூர் தனி அரசு **நடாத்த** முடியும், நடாத்தவேண்டும் என்பதற்கு **சி. பி. என்**னென்ன கூறினுர் என்பதனை. ஏனெனில் **அந்தக் காரணங்களைக் காட்டிலும் பல மடங்கு பொருத்தமும்,** பொருளும், வலிவும் வரலாற்றுச் சிறப்பும்கொண்ட காரணங்கள் காட்டி நாம் திராவிடம் கேட்கிறோம்.

தம்பி! இன்று தேசிய **ஒருமைப்பாட்டுக்காக உழைக்க** ஒத்துக்கொண்ட சி. பி. திவான் வேலைபார்த்த போது திருவாங்கூர் தனிநாடு ஆகவேண்டும் **என்பதற்காகக் கூறியவற்றையும், அப்போது நடைபெற்ற வாதங்களையும் தெரிந்துகொள்ளவேண்டும் என்று** விரும்புகிருய்-தெரிகிறது. சரி! வா, தம்பி! **'பக்திவிலாசம்'** செல்வோம்.

தம்பி! பக்திவிலாசம் என்பது திவான் கொலுவிருக்க, திருவிதாங்கூரிலே அமைந்துள்ள மாளிகை. **மேனுட்**டார் கேட்டு இன்புறும் ஆங்கிலப் புலமையுடன், **பண்டி**தர்கள் கேட்டுப் பரமானந்தம் அடையத்தக்க **சமஸ்**கிருத பாண்டித்யமும், சுயராஜ்யம் கேட்கும் **'பாஷை'**யிலே பயிற்சியும், ஏகாதிபத்திய முறைகளிலே நிபுணத்துவமும்கொண்டு எதனையும் துருவி ஆராயத்தக்க கூர்த்தமதியும், அகன்ற அழகிய விழிகளும், **கவ்வும்** பார்வையும், கனிவு துணிவு எனும் இரண்டினையும் தேவைப்படும்போது எடுத்துக்காட்டவல்ல **அதரமும்** கொண்ட இராஜதந்திரி, இராஜ வம்சத்துக்கு இரட்சகரா

கவும் இரமணியமான குணங்களால் உப்பரிகைகளைச் சொக்கவைக்கக் கூடியவர் என்ற புகழாரம் சூட்டப் பெற்றவரும், கலை வல்லுநர்கள் வியந்து கூறிடும் நிலை பெற்றவருமான, திவான் சர். சி. பி. இராமசாமிஐயர் அழைக்கிருர், 'பக்திவிலாசம்' வருக! எமது திட்டம் பற்றிய விளக்கம் கூறுகிருேம் — என்று, சென்று பார்ப்போம்.

தில்லியிலே, தம்பி! திடீர் மாறுதல்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் காலம். இந்தியாவுக்குச்சுயராஜ்யம் தந்துவிட வெள்ளையர் காத்திருக்கும்வேளை. ஜனுப் ஜின்னுவின் ஒவ்வொரு அசைவுக்கும் பேச்சுக்கும், புன்னகைக்கும் பெருமூச்சுக்கும், புருவநெரிப்புக்கும் பொருள் என்ன என்று காந்தியார் உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்கள் ஆராய்ச்சி செய்திடும்வேளை.

சுயராஜ்யம் நிச்சயம் — ஆனுல் இராஜ்யங்கள் இரண்டு—ஒன்று அல்ல, என்பது இலைமறை காயாக இருந்தவேளை.

சர். சி. பி. இந்தியா இந்தியாவாகவே இருக்க வேண்டும்—பாகிஸ்தான் ஏற்படக்கூடாது—இந்தியா துண்டாடப்படக்கூடாது — என்று அறிவித்துவிட்டு, அது நடைபெறப்போவதில்லை, பாகிஸ்தான் அமையப் போகிறது என்பதனையும் உணர்ந்துகொண்டுவிட்ட சமயம்.

பாகிஸ்தான் அமைகிறது என்ற உடனே, சர். சி. பி. பாகிஸ்தான் அமைப்பை எதிர்க்க அல்ல, 'பக்தி விலாசம்' வரும்படி அனைவரையும் அழைப்பது.

இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிந்துவிடுவதால் மிச்சம் உள்ள இந்தியாவில் திருவிதாங்கூர் இணைய மறுக்கிறது, என்று அறிவிக்க அழைக்கிருர். நானே பேசிக்கொண்டிருக்கிறேனே—இராஜதந்திரி பேசுகிருர் —திவான் திருவாய் மலர்ந்து அருளுகிருர், கேண்மின்!!

சீமாட்டிகளே! சீமான்களே! மதிப்புமிக்க பத்திரிகை நிருபர்களே! திருவிதாங்கூர் தேசபக்தர்களே!

வருக! திருவிதாங்கூர், தனிநாடாகி, தனி அரசு நடாத்த மகாராஜா முடிவு செய்துவிட்டார். அதனை விளக்கவே அழைத்துள்ளேன். ஆகஸ்ட் 15ந் தேதி பிரிட்டிஷ் ஆட்சி அகலுகிறது. சுயராஜ்யம் அளிக்கப்படுகிறது. பிரிட்டிஷ் ஆட்சி அகன்றதும், இதுவரை அந்த ஆட்சியிலே இணைந்திருந்த திருவிதாங்கூர் சமஸ்தானம், பூரண விடுதலை பெறுகிறது, தனிநாடு ஆகிறது, தனி அரசு நடத்த இருக்கிறது.

சுதந்திரத் திருவிதாங்கூர், இந்தியாவுடன் நேசத் தொடர்பு கொண்டு, தனி அரசு மேற்கொண்டு, நடாத்திவரும். பொருளாதார, பண்பாட்டு அடிப்படையிலும் மற்றப் பல காரணங்களாலும் திருவிதாங்கூர், தனி நாடாகித் தனி அரசு நடாத்துவதுதான் நடைமுறைக்கு ஏற்ற இலாபகரமான வழியாகும். இதற்கு எந்தவிதமான மறுப்பும் இருக்கக் காரணமில்லை; நியாயமில்லை. செல்வாக்குள்ள சில வட்டாரத்திலே இந்தத் திட்டம் வெறுக்கப்பட்டாலும், இந்தத் தனி அரசுத் திட்டம் உங்கள் மேலான ஆதரவைப் பெறத் தகுதி வாய்ந்தது என்பதை, திருவிதாங்கூர் மக்களுக்கு, உத்யோகம் வகிப்பவர்கள், உத்யோகப் பற்றற்றவர்கள் ஆகியோர் அனைவருக்கும் நான் கூறுவதுடன், சுதந்திர திருவிதாங்கூர் இலட்சியத்துக்காகப் பாடுபடும்படியாகவும்,ஒத்துழைக்கும்படியாகவும் அன்புடன் அழைக்கிறேன்.

சந்தேகம் கொண்டவர்களுக்குத் தெளிவு அளித்து மனமாற்றம் ஏற்படுத்தும் பணியில், உத்யோகஸ்தர்கள் ஈடுபடவேண்டும். திருவிதாங்கூர் தனிஅரசு நடத்துவது கூடாது என்ற கருத்துக்கொண்டவர்கள், பதவிகளை இராஜிநாமாச் செய்துவிட்டு வெளிஏறிவிடவேண்டும்.

திருவிதாங்கூர் மக்களின் அப்பழுக்கற்ற தேச பக்தியின் பேரால், திருவிதாங்கூரின் கீர்த்திமிக்க வரலாற்றுச் சிறப்பின்பேரால், ஒளிவிடும் திருவிதாங்கூர் பாரம்பரியம், பண்பாடு ஆகியவற்றின்பேரால், உங்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன், சுதந்திர திருவாங்கூர் அமையும் பணியில் ஆர்வத்துடன் ஈடுபட முன் வாரீர்!

தனி நாடாகித் தனி அரசு நடத்தி, உரிமையும் பெருமையும் வேண்டுமா, அல்லது பிளவுபட்ட இந்தியாவிலே பிணைக்கப்பட்டு, அமிழ்ந்துபோய், இந்தியாவில் ஒரு எடுபிடியாக இருக்கப்போகிறீர்களா என்பதை ஒருவருக்கொருவர் கலந்து பேசி முடிவு செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

எந்த நிலைமையையும் சமாளிக்கவும், தேவைப்படும் எந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளவும், மகாராஜா உறுதி பூண்டுவிட்டார்.

திருவிதாங்கூர் தனிநாடு ஆகத் தகுதி இல்லையா? தனி நாடுகளாக உள்ளவற்றுடனே, அல்லது பிரிட்டிஷ் இந்தியாவில் உள்ள மாகாணங்களுடனே, ஜனத் தொகை, வருவாய், வளம் ஆகிய அம்சங்களில், திருவிதாங்கூர் எப்படி இருக்கிறது என்பதை ஒப்பிட்டுப் பார்த்து, முடிவுக்கு வாருங்கள். நேபாளம், சயாம், நார்வே, சுவிட்சர்லாந்து, ஆகிய நாடுகளுடன் திருவிதாங்கூரை ஒப்பிட்டுப் பாருங்கள். தனி நாடாக இருக்கும் தகுதி திருவிதாங்கூருக்கு இல்லையா, சொல்லுங்கள். இங்கு 65 இலட்சம் மக்கள் இருக்கிருர்கள்; ஆண்டு வருமானம் நமது அரசுக்கு ஒன்பது கோடி ரூபாய். இந்த நிலையில், தனி அரசு நடாத்த இயலும்.

திருவிதாங்கூர் விரும்புவது என்ன? பாரதப் பண்பாடு போன்றது போலவே காணப்படினும், திருவிதாங்கூருக்கு என்று அமைந்துள்ள பண்பாடு, தனித்தன்மை வாய்ந்தது, தனியானது அந்தப் பண்பாட்டின் வழியின்படி, இலட்சியங்களின்படி திருவிதாங்கூர் தனிஅரசை நடத்திச் செல்ல உரிமை வேண்டும்.

மேலும் கூறுகிறேன், இந்தியா பிளவுபடுவதால் ஏற்படக்கூடிய வேதனைகளிலிருந்து, தென்னிந்தியாவைக் காப்பாற்றும் இரட்சகனாகத் திருவிதாங்கூர் விளங்கப்போகிறது.

திருவிதாங்கூர் எப்போதுமே, சர்வதேச அரங்கிலே ஒரு தனி அந்தஸ்துப்பெற்று வந்திருக்கிறது.

திருவிதாங்கூரை யாரும் வெற்றிகொண்டதில்லை. அதற்கு மாறாக, கடற்படை வலிவுள்ள டச்சுக்காரரை **கொளச்சல்** போரிலே, திருவிதாங்கூர் தோற்கடித்து, ஐரோப்பிய நாட்டவரைத் தோற்கடித்த ஒரே இந்திய நாடு என்ற கீர்த்தி பெற்றிருக்கிறது.

இவைகளை எண்ணிப்பாருங்கள்—வரலாறு, பாரம்பரியம், பண்பாடு ஆகியவற்றை நினைத்துப்பாருங்கள். இத்தகைய திருவிதாங்கூர், சுதந்திரம் அடையவேண்டும் என்ற இலட்சியத்தைப் போற்றாதார் இருக்கமுடியுமா!

முன்பு, சுதந்திரத்தைக் காத்துக்கொண்டிருக்கிறது திருவிதாங்கூர்.

தேவைப்பட்டால் எதிர்காலத்திலும், திருவிதாங்கூர் தன் சுதந்திரத்தைப் பாதுகாத்துக்கொள்ளும்.

நான் திருவாங்கூர்க்காரனாக இல்லையே என்று வருத்தப்படுகிறேன். எனினும், திருவிதாங்கூர் தனிநாடு ஆவதற்கான நிலைமை உருவாவதைக் காண அனைவரும் மகிழ்ச்சியும் பெருமையும் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

✻

தம்பி! 1947-ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 11-ஆம் நாள், பக்தி விலாசத்தில், திவான் சி. பி. பேசியுள்ள ஆங்கில விளக்க உரையின் சுருக்கம் மேலே காணப்படுவது. எப்படி சி. பி.? கப்பலின் மேற் தட்டிலே கெம்பீரமாக நின்றுகொண்டு, பீரங்கிகளை இன்னின்ன முறையிலே அமையுங்கள், என்று உத்தரவிட்டுத், திருவிதாங்கூர் கப்பற்படைக்குத் தலைமை வகித்து நடத்திச்செல்லும் கடற்படைத் தளபதிபோலத் தெரிகிறாரல்லவா! அவர்கள் இப்போது, நம்மை அழைத்துக் கேட்கப்போகிறாராம், திராவிடம் தனிநாடுஆகவேண்டும் என்று கேட்கலாமா, சரியா, முறையா, என்று.

1947 ஜுன் மாதம் திருவிதாங்கூர் தனிநாடு ஆக வேண்டும் என வீர உரை!

1962 ஜுன் மாதத்தில் அவருக்குப் புதிய அலுவல்—பிரிவினை கூடாது என்று உபதேசம் செய்ய!!

கூரிய கத்தியால் பழமும் நறுக்கலாம், கழுத்தையும் அறுக்கலாம்.

விளக்கொளி கொண்டு திருக்குறளும் படிக்கலாம், திருட்டுக் கணக்கும் எழுதலாம்.

அறிவைக்கொண்டு சிலர் எதையும் செய்யலாம் என்று நினைக்கிறார்கள் போலும்!!

தம்பி! திருவிதாங்கூரை விடுவிக்கும் வீரர், டச்சுக்காரரை கொளச்சல் யுத்தத்திலே திருவிதாங்கூர் தோற்கடித்ததை எடுத்துக்காட்டி, தோள் தட்டுங்கள்! முரசு கொட்டுங்கள்! துந்துபி முழக்குங்கள்! வாளை உருவுங்கள்! என்று முழக்கமிட்டார். இப்போது அவருக்கு இடப்பட்ட வேலை,

கங்கை கொண்டான்
கடாரம் வென்றான்
கலிங்கம் கொண்டான்

என்றெல்லாம் புகழாரம் சூட்டிக்கொண்டுள்ள நாம், கோரியிடமும் கஜனியிடமும், தைமூரிடமும் செங்கிஸ்கானிடமும் தோற்ற வடவரிடம், பிணைக்கப்பட்டு இருப்பதுதான் பேரறிவு என்று எடுத்துக்கூற!

'பக்தி விலாச'த்தில் பரணி!

பண்டிதர் சகவாசத்தால், முகாரிபாடப்போகிறார் போலும், போகாதே! போகாதே! என் மக்களா! பொல்லாது பொல்லாது பிரிவினைதான்!! — என்று சுருதி தவறாமல் பாடுவார்போல இருக்கிறது. ஆண்டவனே! ஆண்டவனே! அறிவையும் கொடுத்து அதனை எப்படியும் வளைத்துக்கொள்ளும் துணிவையும்கொடுத்தாயே! இது தகுமா என்று கேட்கத்தோன்றுகிறதல்லவா?

சர். சி. பி.யின் இந்தத் திட்டம் பற்றித் தெரிந்ததும் மகாத்மா பதறிப்போனார். மறுநாள் மாலையே வழக்கமாக நடாத்தும் வழிபாட்டுக் கூட்டத்தில், இதனைக் கண்டித்துப் பேசினார்.

கோடிக்கணக்கான மக்களால் கண்கண்ட கடவுள் எனக் கொண்டாடப்படும் மகாத்மாவே இந்தத் திட்டத்தைக் கண்டித்துவிட்டாரே, இனி எப்படி அதனை வலியுறுத்துவது என்று சி. பி. சஞ்சலமடைந்தாரா? அவரா! துளிகூட இல்லை. உடனே ஒரு தந்தி கொடுத்தார் மகாத்மாவுக்கு.

> எவரும், பல நூற்றாண்டுகளாகத் திருவிதாங்கூரை வெற்றி கொண்டதில்லை. சுதந்திர பாரம்பரியம் அதற்கு உண்டு. அதே சுதந்திரத்தைத் திருவிதாங்கூர் மீண்டும் பெற்று விளங்கமுடியும்.

> சுதந்திரத் திருவிதாங்கூரில் மக்களுக்கு உரிமை வழங்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. வயதுவந்தவர்கள் அனைவருக்கும் 'ஓட்டு உரிமை' வழங்கப்போகிறோம். திருவிதாங்கூரில் எண்ணற்ற பொதுமக்கள் சுதந்திரத்தை விரும்புகிறார்கள். இதனைத் தங்களுடைய அடுத்த வழிபாட்டுக் கூட்டத்தில் எடுத்துக்கூறவும்.

இப்படித் துணிவுடன் தந்தி அனுப்பினவர்தான் சர். சி. பி.

அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக்கு ஏகப்பட்ட சீற்றம். சர். சி. பி-யின் சுதந்திர திருவிதாங்கூர் திட்டத்தை வன்மையாகக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றிற்று.

ஆனால், அதேபோது தவிர்க்கமுடியாத காரணங்களால், பாகிஸ்தான் பிரிவினைக்கு இணங்குவதாகவும் தீர்மானம் போடப்பட்டது.

மகாத்மாவின் கண்டனம், அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் சீற்றம் எனும் எதுவும் சி. பி-யின் உறுதியைக் குலைக்கவில்லை. தமது திட்டத்துக்கு ஆதரவு திரட்டும் வேலையில் வெகு மும்முரமாக ஈடுபட்டார். பல பிரமுகர்களைக்கொண்டு ஆதரவு அறிக்கைகள் வெளியிடச்செய்தார்.

> தொன்றுதொட்டுச் சுதந்திர நாடாகவே திருவிதாங்கூர் இருந்துவந்திருக்கிறது. எதிர்காலத்திலும் அவ்விதமாகவே இருக்கவேண்டும். டச்சுக்காரர் போன்றவர்களாலேயே திருவாங்கூரைத் தோற்கடிக்க முடியவில்லை. வெள்ளைக்காரர்கள் கூடத் திருவாங்கூருடன் ஒப்பந்தம் செய்துகொண்டவர்தாம்.
>
> திருவிதாங்கூரின் சுதந்திரத்தை எதிர்ப்பவர்கள் நாட்டுக்குத் துரோகிகள்.
>
> ஏராளமான வளங்கள்உள்ள திருவிதாங்கூர் ஏன் சுதந்திரநாடாக இருக்கக் கூடாது?

என்று கத்தோலிக்க சமுகத்தின் செல்வாக்குள்ள தலைவரொருவர் அறிக்கை வெளியிட்டு, சர். சி. பி-யின் திட்டத்தை ஆதரித்தார்.

தம்பி! மூலைக்கு மூலை எதிர்ப்புகள்! சளைக்கவில்லை, சர். சி. பி.

அரசியல் சட்டப் பிரச்சினைகள் ஆராயப்பட்டன—நுண்ணறிவுமிக்க வாதங்கள் நடைபெற்றன.

வெள்ளையர் ஆட்சி அகன்ற உடன், 'சமஸ்தானங்கள்' விடுதலை பெற்றுவிடுகிறனவா, இல்லையா? அவை எவருக்குக் கட்டுப்பட்டு இருக்கவேண்டும் என்ற பிரச்சினை கீர்த்திமிக்க வழக்கறிஞர்களின் பொழுதுபோக்காகிவிட்டது.

ஒருபுறத்தில், அல்லாடியும், கோபாலசாமிஐயங்காரும் கச்சையைவரிந்து கட்டிக்கொண்டு நின்றார்கள், சமஸ்தானங்களுக்குச் சுதந்திரம்இல்லை என்று விளக்க, ஆதாரங்கள் ஏராளம்.

சர். சி. பி. சட்ட ஆதாரங்களைச் சளைக்காமல் எடுத்து வீசினார். பெதிக்லாரன்சு சொல்லி இருப்பதைக் கவனியுங்கள், கிரிப்ஸ் பேசியிருப்பதன் பொருளைப் பாருங்கள் என்று கூறினார்.

தமது வாதங்களை மற்றவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா இல்லையா என்றுகூடக் காத்துக்கொண்டில்லை. விரைவாகத், திட்டமிட்டபடி செயல்படலானார். மீண்டும் பத்திரிகை நிருபர்களை வரவழைத்து,

> திருவிதாங்கூருக்குத் தனி அரசு நடாத்தும் உரிமை இருக்கிறது.
>
> அதற்கான முடிவு எடுக்கப்பட்டாகிவிட்டது.
>
> முடிவு மாற்றிக்கொள்ளப்படக் கூடியது அல்ல.

என்று அறிவித்தார்.

இரண்டொரு நாட்களிலே வேறோர் அறிவிப்புத் தொடர்ந்தது.

> ஜனாப் ஜின்னாவிடம் நேரிலே நடத்திய பேச்சுவார்த்தைகளின்படியும், கடிதப்போக்குவரத்தின்படியும், பாகிஸ்தான் திருவிதாங்கூர் பிரதிநிதி ஒருவரை ஏற்றுக்கொள்ளச் சம்மதம் அளித்துள்ளது.
>
> அதன்படி, முன்னாள் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக இருந்துவந்த கான்பகதூர் கரீம்கான் பாகிஸ்தானில் திருவிதாங்கூர் பிரதிநிதியாகப் பணிபுரிய நியமிக்கப்பட்டிருக்கிறார்.

திருவிதாங்கூர் சுதந்திரநாடு ஆகிவிட்டால் என்னென்ன செய்யவேண்டுமோ அவைகளை முறைப்படி திவான் செய்யத் தலைப்பட்டுவிட்டார்! பாகிஸ்தானத்துக்கு ஒரு பிரதிநிதியை நியமித்ததைப்போலவே இந்தியாவில் இருக்கவும் ஒரு பிரதிநிதியை நியமித்தார். இவர் பெயர் பரமேஸ்வரன்பிள்ளை.

நேருபோன்றோர்களுக்கு சீற்றம் கட்டுக்கடங்கவில்லை.

பிரிட்டிஷ் ஏகாதிபத்யமே பணிகிறது, இந்தச் சுண்டைக்காய் அளவுள்ள திருவாங்கூர் தலைவிரித்து ஆடு

வதா! இதனை ஒடுக்கியே தீரவேண்டும் என்று ஆர்ப்பரித்தனர்.

தக்க சமயத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்க முடிவுசெய்துவிட்டோம் என்று காங்கிரஸ் அறிவித்தது.

எப்போது? சி. பி. நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டபிறகு!!

சர். சி பி, இதனைக்கேட்டுக் கலக்கமடையவில்லை.

நடவடிக்கையா எடுக்கப்போகிறீர்கள்? என்ன நடவடிககை? பொருளாதார நெருக்கடி உண்டாக்க எண்ணமா? முடியாதே! திருவாங்கூருக்குத் தேவைப்படும் உணவுப் பொருள் அனுப்பமுடியாது என்று கூறுவீர்கள். பரவாயில்லை இந்தியாவிலே, உணவுப் பொருள் உற்பத்தி, தேவைக்கு அதிகமாக இல்லை. தெரியும். பற்றுக்குறை!! உணவுப் பொருள் தர வேறு இடம் இருக்கிறது. பெற்றுக்கொள்ள முடியும். ஏற்பாடாகிவிட்டது.

திருவாங்கூரின் விளை பொருள்களான தேயிலை, இரப்பர், மிளகு, கராம்பு, கனிப்பொருள் ஆகியவற்றை இந்தியா வாங்காது என்பீர்களா? சொல்லுங்கள்! நட்டமில்லை! இவைகளுக்கு வேறு மார்க்கட் இருக்கிறது.

இடைக்காலத்திலே சிறிது நெருக்கடி ஏற்படலாம். நஷ்டம் ஏற்படலாம்.

ஆனால், பொருளாதாரத் துறையிலே போர் நடத்துவதைப் பிரிட்டனும் ஐ. நா. சபையும் பார்த்துக்கொண்டு வாளா இருக்கா!

இப்படிப்பட்ட கருத்தமைந்த, காரசாரமிக்க பதிலடி கொடுத்தார்; பதறவில்லை, பயப்படவில்லை.

தம்பி! மறந்துவிடாதே, சர். சி. பி, தனிஅரசு உரிமை கேட்டுக், கிளர்ந்தெழுந்தது, மொத்தக் கேரளத்துக்குக்கூட அல்ல; அதிலே ஒரு துண்டான, திருவிதாங்கூர் சமஸ்தானத்துக்கு!!

தனிஅரசு நடத்த முடியுமா என்று கேட்டவர்களுக்கு, கொளச்சல் களத்தைக் காட்டினார்.

பிழைக்க முடியுமா என்று கேட்டவர்களுக்கு, தோட்டங்களைக் காட்டினார்.

தோட்டா உண்டா என்று கேட்டவர்களுக்கு, சுதந்திர திருவிதாங்கூருக்காக எல்லாவிதமான நடவடிக்கைகளிலும் ஈடுபட மகாராஜா உறுதியாக இருக்கிறார் என்று போர்க் குரலே எழுப்பிக் காட்டினார்.

அவர்தான் இப்போது திராவிடம் தனிஅரசு கேட்கக்கூடாது என்று எடுத்துக் கூறும் வேலையில் அமர்த்தப்படுகிறார். விந்தையாக இல்லையா!!

சுயராஜ்ய இந்தியாவில் சேர மறுக்கும் சமஸ்தானங்களை விரோதிகளாகவே பாவித்து அதற்கேற்ற நடவடிக்கைகள் எடுப்போம் என்று நேரு பண்டிதர் கூறினார்.

ஏ! அப்பா! எத்தனை பெரிய மிரட்டல்! ஐக்கிய நாடுகள் சபையிலே சேர மறுக்கும் நாடுகள்கூட உள்ளன; அவைகளைக்கூட இப்படி, ஐ. நா. சபை மிரட்டவில்லையே!!—என்று சி. பி. ஏளனம் பேசினார்.

பாகிஸ்தான் அமைந்தாலும், எல்லைப்புற முஸ்லீம்கள்—பட்டாணியர் — தனியாக இருக்க விரும்புகிறார்கள் என்று அறிவிக்கப்பட்டது; காங்கிரஸ் அந்த பக்தூனிஸ்தான் திட்டத்தை ஆதரித்தது.

சி. பி. உடனே தந்தி கொடுத்தார்!

பக்தூனிஸ்தானை ஆதரிக்கிறீர்கள்—திருவாங்கூர் தனிநாடு ஆவதை எதிர்க்கிறீர்களே, இது என்ன நியாயம்?—என்று காங்கிரசைக் கேட்டார்.

பக்தூனிஸ்தான் கேட்கும் எல்லைப்புற மக்கள் 50 இலட்சம்—திருவிதாங்கூர் மக்கள் தொகை அதைக் காட்டிலும் அதிகம்.

திருவாங்கூரின் ஆண்டு வருவாய் ஒன்பதுகோடி ரூபாய்—எல்லையின் நிலைமையோ, வருவாய் போதாமல், ஆண்டொன்றுக்கு இரண்டரைக் கோடி ரூபாய், மான்யம் பெறுகிறது, மத்ய சர்க்காரிடம்.

அதற்குத் தனி நாட்டு நிலை! திருவாங்கூர் அடிமையாக இருப்பதா? — இவ்விதமாகவெல்லாம் இடித்துக் கேட்டார்.

பாகிஸ்தானுடன் ஒப்பந்தம் செய்துகொண்டார்—வெளி நாடுகளிடம் உதவி கேட்கிறார்—இந்திய அரசுக்கே வேட்டு வைக்கிறார் என்றெல்லாம் காங்கிரஸ், சர். சி. பி-யைக் கண்டிக்கலாயிற்று.

சர் சி. பி. இராமசாமி ஐயர், எதற்கும் கலங்கவில்லை.

திருவாங்கூரிலேயே பலமான எதிர்ப்பு மூண்டது; சமாளிப்பேன் என்று கூறினார்.

மீண்டும் நிருபர் மாநாடு நடத்தினார்—ஜூன் 25ல்—நகரமண்டபத்தில். அதிலே, விளக்கமாகவும் திட்டவட்டமாகவும் தெரிவித்தார் திருவாங்கூரின் தனிஅரசு திட்டம்பற்றி.

திருவிதாங்கூர் சிறிய நாடு அல்ல.

அதனைப் பட்டினிப்போட்டுப் பணிய வைக்கலாம் என்று கருதினால், தன்மானமுள்ள நாட்டுப்பற்று மிக்க, திருவாங்கூர் குடிமகன் ஒவ்வொருவரும் என்ன முடிவு செய்வார் என்பதிலே எனக்கு ஐயமில்லை.

உலகிலே ஆத்மார்த்தத் துறையின் ஒப்பற்ற தலைவராக விளங்கவேண்டிய மகாத்மா ஒரு கட்சியின் ஆதரவாளர் என்ற நிலைக்குத் தம்மைத் தாழ்த்திக் கொள்கிறார்.

வழிபாட்டுக் கூட்டத்திலே அரசியல் பேசுவது பொருத்தமற்றது.

இப்படி விளக்கங்களை வாரி வீசலானார்.

பாகிஸ்தானுடன் ஒப்பந்தம் செய்துகொண்டார் என்று சொன்னதும், ஊரே கொதிக்கும், சி. பி, திணறிப் போவார் என்று காங்கிரஸ் தலைவர்கள் எண்ணிக் கொண்டனர். சர். சி. பி, ஒளிக்கவுமில்லை, மன்னிப்புக் கேட்கவுமில்லை, விவரம் தரத் தயக்கம் காட்டவுமில்லை. தனக்கும் ஜின்னாவுக்கும் நடைபெற்ற தந்திப் போக்குவரத்தை வெளியிட்டார் நிலைமையைத் தெளிவாக்க.

ஜனாப் ஜின்னாவுக்கு, சி. பி. அனுப்பியிருந்த தந்தியில், பாகிஸ்தான் நீடூழி காலம் நல்வாழ்வு வாழ வேண்டும் என்று வாழ்த்தினார்.

> நான் பாகிஸ்தான் இயக்கத்தையும் இந்தியா பிளவு படுவதையும் பலமாகக் கண்டித்திருக்கிறேன் ஆனால் தாங்கள் தங்கள் கொள்கையிலே தளராத நம்பிக்கைகொண்டு, விடாப் பிடியாகவும் தீரமாகவும் உழைத்து, தங்கள் இலட்சியத்திலே வெற்றி பெற்றுவிட்டதால், இனி அதுபற்றி ஏதும் கூறுவது தேவை இல்லை. நான் தங்களுடைய ஒத்துழைப்பையும் பாகிஸ்தானின் ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கிறேன். நான் ஒத்துழைக்கச் சித்தமாக இருக்கிறேன்.
>
> அதுபோலவே இந்தியாவுடனும் ஒத்துழைக்க விரும்புகிறேன். இரு அரசுகளிலும் திருவிதாங்கூர் தன் பிரதிநிதிகளை அனுப்பி வைக்க முடிவெடுத்து இருக்கிறது.
>
> நம் இரு நாடுகளுக்கும் பொதுவானதும் நன்மை தரத்தக்கதுமான வாணிபத் தொடர்புகள் சம்பந்தமான பிரச்சினைகளைக் கலந்து பேசி முடிவெடுக்க, திருவாங்கூர் பிரதிநிதி பணிபுரிவார்.

இந்தத் தந்தி மூலம், சர். சி. பி. பாகிஸ்தானுடைய உறவைப் பெற்றுக்கொள்ளத் திட்டமிட்டார். அதற்குக் காரணமும் கூறினார், நிருபர்களிடம். திருவாங்கூர் தனிநாடு ஆகிவிட்டால் உணவுப் பொருள் அனுப்ப மாட்டோம் என்று இந்தியாவில் உள்ள சிலர் மிரட்டிப் பார்க்கிறார்கள். அந்த மிரட்டலைப் பொருளற்றதாக்கத்தான், உணவுப் பொருள் தரக்கூடிய பாகிஸ்தானுடன் ஒப்பந்தம் செய்துகொண்டேன். பாகிஸ்தானிலுள்ள சிந்து, பலுஜிஸ்தான் பகுதியிலிருந்து அரிசி கிடைக்கும். அதுவும் கராச்சி துறைமுகத்திலிருந்து நேரே எமது துறைமுகத்துக்கு வரும். அதுபோலவே, மத்திய கிழக்கு நாடுகளுக்குத் தேவைப்படும், எமது நாட்டுப் பொருள்களை,கராச்சித்துறைமுகம்அனுப்பிவைப்போம். பாகிஸ்தானுடன் செய்துகொண்ட உறவும் உடன்பாடும், திருவாங்கூரை மிரட்டமுடியாது என்பதை எடுத்துக்காட்டுவதற்கே—என்று கூறினார்.

ஜனாப் ஜின்னா, வாழ்த்துக்கு நன்றி தெரிவித்து, திருவாங்கூர் நல்வாழ்வு பெற்றுத் திகழவேண்டும் என்று வாழ்த்தி, உறவு மேற்கொள்வதை வரவேற்று, பதில் தந்தியும் அனுப்பினார்.

பாகிஸ்தானுடனா ஒப்பந்தம்? ஜனாப் ஜின்னாவுடனா உறவு? என்று கேட்டவர்களுக்கு, திவான் சி. பி. பதில் கூறினார்,

> ஏன் பதறுகிறீர்கள்? என்ன தவறு? கொடுமை பல புரிந்தது ஜப்பான், யுத்தத்தின் போது—அந்த ஜப்பானுடன் காங்கிரஸ் கை குலுக்கி நட்புப் பாராட்டும்போது, நான் ஜின்னாவுடன் நட்புக் கொண்டால் என்ன தவறு? அது எப்படி அக்ரமம் ஆகமுடியும்?
>
> பல இலட்சக் கணக்கான கெஜம் மில் துணியை ஜப்பானிலிருந்து வாங்கிக் கொள்ள, காங்கிரஸ் ஒப்புக்கொண்டிருக்கிறது. அப்படியிருக்க, திருவாங்கூர் பாகிஸ்தானுடன் வியாபார ஒப்பந்தம் செய்துகொள்வதுகண்டு பதறுவானேன்?
>
> இரு நாடுகளும் கடலால் சூழப்பட்டவை. தொடர்பு கொள்வது எளிது, தேவை, இரு நாடுகளுக்கும் இலாபகரமானது.

இவைகளுக்கெல்லாம், காங்கிரஸ் தலைவர்கள் தமது எரிச்சலைக் காட்டிக்கொண்டார்களே தவிர, தக்க சமாதானம், மறுப்புரை தர இயலவில்லை.

தமக்குக் கிடைத்த இராணுவ வலிவைக் காட்டுவது தவிர, அவர்களிடம் வேறு தரமான வாதங்கள் இல்லை.

கடைசியில், வலுத்தவன் வென்றான் என்றுதான் கதை முடிந்ததே தவிர, சி. பி. தமது வாதத்தில் தோற்றார் என்று கூறுவதற்கில்லை.

மே திங்கள் 17ம் நாள் மீண்டும் 'பக்தி விலாசம்', சி. பி.யின் முழக்கத்தைக் கேட்டது.

> திருவாங்கூர், தனது வருவாய்க்குப் பெரிதும் ஏற்றுமதி இறக்குமதி வரிகளையும் வருமான வரியையும் நம்பிக்கொண்டிருக்

கிறது. இந்தியப் பேரரசு எனும் திட்டத்தின் படி திருவாங்கூர் இந்தியாவில்இணைக்கப்பட்டு விட்டால், இந்த வருவாய் இனங்கள், மத்திய சர்க்காருக்குச் சொந்தமாகும்; அதிலே ஒரு பகுதியைத்தான் திருவாங்கூர் பெறமுடியும். எனவே திருவாங்கூர், இந்தியாவிலே இணைவது, நட்டமாக முடியும்.

இந்தியா—பாகிஸ்தான் எனும் இரு அரசுகளுடனும், திருவாங்கூர் உறவுகொண்டு வாழவேண்டிய நிலைமையில் இருக்கிறது. எனவே, எந்த அரசிலும் அது இணைந்துவிட முடியாது. இந்திய பூபாகத்திலேயே மற்ற எந்தப் பகுதியையும்விடத், தனி அரசு நடத்தும் தகுதி, திருவாங்கூருக்கே மிக அதிகமாக இருக்கிறது.

இந்தச் சுதந்திர உரிமையைத் திருவாங்கூர் இழந்துவிடச் சம்மதிக்காது.

தம்பி! இவ்வளவு விளக்கமாகத், தனி அரசுக்காக வாதாடியவர் சர். சி. பி.

இவர் இன்று, திராவிடம் தனி அரசு நடத்தக் கூடாது என்று பேச அழைக்கப்பட்டிருக்கிறார். விந்தை மிக்க நிகழ்ச்சி அல்லவா?

திராவிடம் தனிநாடாக இருக்கக்கூடாது என்று இவர் எந்த நியாயத்தின் பேரில் எடுத்துக்காட்டுவார்! திறமை இருக்கலாம்; நிரம்ப! ஆனால் நேர்மையான வாதமாக இருக்கமுடியுமா!

என்ன செய்யலாம்? நான்கூடத்தான் முயற்சித்துப் பார்த்தேன் — முடியவில்லை — விட்டுவிட்டேன் — அதனால்தான் உங்களுக்குச் சொல்கிறேன், விட்டுவிடுங்கள்—என்று சர். சி. பி. கூறுவாரானால், தம்பி!

ஐயா! தங்கள் திட்டம் அரண்மனையில் உதித்தது, எங்கள் திட்டம் மக்கள் மன்றத்தில் மலர்ந்தது!

தாங்கள் மக்களின் கருத்தறிந்து செயல்படவில்லை; அதிகார பலத்தை மட்டும் நம்பினீர்கள்; நாங்கள் மக்களின் கருத்தறிந்து அவர்களின் துணையை நம்பி இந்தத் தொண்டாற்றி வருகிறோம்.

உங்களுக்கும் காங்கிரசுக்கும் ஏற்பட்ட விவாதம், **தாக்கும் சக்தியை** அடிப்படையாகக் கொண்டது; எங்களுடையது, **தாங்கும் சக்தி**யை அடிப்படையாகக்கொண்டது.

மக்களின் துணைக்கு உள்ள வலிவு மகத்தானது — அதனை மிரட்டலாம், தாக்கலாம், தகர்த்துவிடமுடியாது.

என்று பதில் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

காந்திய நெறியிலே காங்கிரஸ் அரசு நடந்து கொள்ளுமானால், எத்தனை கசப்பானதாக அவர்களுக்கு ஒரு திட்டம் தோன்றினாலும், மக்கள் அந்தத் திட்டத்திற்கு ஆதரவு தருகிறார்கள் என்றால், அந்த ஆதரவை அழிக்க அடக்குமுறையை வீசக் கூசும்.

அதுபோலவே, நமக்கு நம்முடைய திட்டத்திலே தூய்மை நிறைந்த நம்பிக்கை இருக்குமானால் எத்தகைய விலைகொடுக்கவும் நாம் தயாராக இருக்க வேண்டும்.

காங்கிரஸ் அரசுக்கு உள்ள தாக்கும் சக்தியை எடுத்துக்காட்டி சர். சி. பி. வாதாடுவாரானால், தம்பி! நாம் காந்திய நெறி வெல்லும் என்பதனைத்தான் எடுத்துக்கூறவேண்டும்.

காந்தியாரைவிட வன்மையாக, பாகிஸ்தான் திட்டத்தைக் கண்டித்தவர்கள் இல்லை. முஸ்லீம்களைத் தனி இனம் என்று ஏற்றுக்கொள்ளவே முடியாது என்றார்; என்ன நேரிடுவதாயினும், இந்தியா பிளக்கப்படுவதைச் சகித்துக்கொள்ள முடியாது என்றார். வீம்புக்காக அல்ல, உள்ளத் தூய்மையுடன். எனினும், நிலைமை வளர வளர, அவர் பாகிஸ்தானுக்கு இணங்க வேண்டி நேரிட்டது. அதனைக் குறித்துக் காந்தியாரிடம் கேட்கப்பட்டபோது,

"இந்தியா பிரிக்கப்படக்கூடாது என்று நான் சொன்னபோது மக்களின் விருப்பத்தைத்தான் எடுத்துரைத்தேன். ஆனால் இப்போது மிகப் பெரும்பாலான மக்களுடைய கருத்து, நாட்டுப் பிரிவினைக்கு ஆதரவாக இருப்பதைக் காண்கிறேன். இந்த நிலைமையில், மக்களை வற்புறுத்தி என் கருத்தை அவர்களிடம் திணிக்க நான் விரும்பவில்லை."

என்ற பதிலுரையைத் தமது வழிபாட்டுக் கூட்டத்தில், ஜூன் 9-ந் நாள் படித்துக்காட்டினார்.

காந்தியம் கருகிப்போய்விடவில்லை, என்ற நம்பிக்கையுடன் பணியாற்றி வருகிறோம்.

நாளுக்கு நாள், நமது கருத்துக்கு ஆதரவு வளரக் காண்கிறோம்.

மக்கள் திரண்டு நின்று ஆதரவு தந்தாலும், நாங்கள் ஒத்துக்கொள்ளமாட்டோம் என்று முழக்கமிட்டு, அடக்குமுறையை அவிழ்த்துவிட்டால், அதனை ஏற்றுக்கொள்ள நாம் தயாராகவிட வேண்டியதுதான்.

நமது வேண்டுகோளும் விளக்கமும், பெற்றுத்தர முடி

யாத வெற்றியை, நாம் கொட்டும் இரத்தம்தான் பெற்றுத் தரும் என்று நிலைபிறக்குமானால், அதனைப் பெறற்கரிய பேறு எனக்கொள்ளவேண்டும்.

அலட்சியப்படுத்தத்தக்கது — அர்த்தமற்றது — என்று ஒரு வேளையும், ஆபத்தானது — அடக்கித்தீர வேண்டியது என்று மற்றோர் வேளையும், மாறிமாறி, பேரரசு நடாத்துவோர் பேசிடக் கேட்கிறோம். சிந்தனை குழம்பி இருப்பதற்கு எடுத்துக்காட்டு—புரிகிறதல்லவா?

பிரிவினை கேட்பவர்களை விட்டுவைக்கக்கூடாது—வளரவிடக்கூடாது—என்று பேசுவோரும் உளர் — வீணாக உருட்டி மிரட்டி அந்த இயக்கத்தை ஒடுக்க நினைப்பது தவறு—ஏன் பிரிவினைக் கிளர்ச்சி தோன்றியது எப்படி வளருகிறது என்பதனை ஆராயவேண்டும் —பரிகாரம் தேடவேண்டும் என்று அறிவுரை கூறுவோரும் உளர்.

தம்பி! இப்போதே, மிக முக்கியமான முனைகளிலிருந்து மூன்று அடிப்படைக் கருத்துகள் எடுத்து வலியுறுத்தப்பட்டு வருகின்றன.

கழகத்தைத் தடுப்பது — கழகப் பிரசாரத்துக்கு எதிர்ப்பிரசாரம் செய்வது — கூட்டணி அமைத்து கழகத்தைத் தாக்குவது—என்ற யோசனைகளைச் சிலர் வெளியிட்டிருக்கிறார்களே, அதனைக் கூறவில்லை.

(1) இந்தி ஆதிக்கம் கூடாது.

(2) மத்தியசர்க்காரிடம் அதிகாரம் குவிந்து கிடக்கக்கூடாது.

(3) பொருளாதார வளர்ச்சி ஒரு சீராக அமைய வேண்டும்—ஒரு பக்கம் வளமும் மற்றோர்பக்கம் வரட்சியும் இருக்கும்நிலை மாற்றப்பட்டாகவேண்டும்.

இந்த மூன்று அடிப்படைக் காரியங்களைச் செய்திட முனையவேண்டும் என்று எடுத்துக்கூறி, இவைகளைச் செய்தால், கழகம் சரிந்துவிடும் என்று யோசனைகூறுகிறார்கள்.

கழகத்தைக் காட்டிக் காரியத்தைச் சாதித்துக் கொள்ளச் சிலர் இந்த முறையை மேற்கொண்டால், நமக்கு நஷ்டமும் இல்லை, கஷ்டமும் இல்லை, நாம் அதற்குக் குறுக்கே நிற்கப்போவதுமில்லை.

ஆனால், இவைகளை செய்தளிப்பதால், விடுதலை ஆர்வம் மங்கிவிடும், மடிந்துவிடும் என்று எதிர்பார்ப்பது, எத்துணை பெரிய ஏமாளித்தனம் என்பதனைக் காலம் எடுத்துக்காட்டும்.

ஒவ்வொருமுறை சலுகைகள் சில்லறை உரிமைகள் தருகிற போதும் வெள்ளைக்காரன், இனி சுயராஜ்யக் கிளர்ச்சி செத்து விடும் என்ற நம்பிக்கையுடன்தான் இருந்தான். ஆனால் இந்தச் சலுகைகள் பெறப்பெற, நாட்டு மக்கள், சலுகை தந்த வெள்ளைக்காரரைப் பாராட்டவில்லை; காங்கிரசின் எதிர்ப்பினால்தான் இவை கிடைத்தன என்று உணர்ந்து காங்கிரசைப் பாராட்டத் தலைப்பட்டனர்; வேகம் குறையவில்லை, திசைமாறவில்லை, இலட்சியத்தை அடைந்தேதீருவது என்ற உறுதி தளரவில்லை.

அதேநிலைதான் இப்போதும். ஆனால், தம்பி! அன்று தம்மைத் தியாகம்செய்துகொள்ள எண்ணற்றவர்கள் வீறுகொண்டெழுந்து விடுதலைக் கிளர்ச்சியிலே ஈடுபட்டார்களோ, அதேபோல நம்மிலே பலரும் தியாகத் தீயில் குளித்திடத் தயாராகவேண்டும்.

இப்போதைக்கு ஒன்றும் இல்லை — என்கிறார்கள் காங்கிரஸ் அரசு நடத்துவோர். ஆனால், எப்போதும் எதுவும் நேரிடாது என்று இருந்துவிடவேண்டாம். தம்பி! எப்போது வேண்டுமானாலும், என்னவிதமான அடக்குமுறை வேண்டுமானாலும் வெடித்துக் கொண்டுவரக் கூடும். நம்முடைய நிலை, எப்போது அந்த அழைப்பு வருவதாக இருப்பினும், ஏற்றுக்கொள்ளும் துணிவுடன் இருப்பதுதான்:

“எந்த நேரத்திலும் அழைப்பு வரலாம்; எனவே போர் உடையுடன் இருந்துவாருங்கள்” என்று ஒருமுறை நேரு பெருமகனார் கூறினார்.

அது காங்கிரஸ் தொண்டர்களுக்கு மட்டும் கூறிய வாசகம் என்று கருதாதே, தம்பி! அது, விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபடும் அனைவருக்கும் பொருத்தமான அறிவுரையாகும்!!

நாம் ஒரு இலட்சியத்துக்காகப் பாடுபட முனையும் போது, வினைவுகளைத் தாங்கிக்கொள்ளவும் தயாராக இருக்கவேண்டும்.

அடக்குமுறை சூடாகத்தான் இருக்கும், ஆனால் அதை ஒரு இலட்சியத்துக்காக ஏற்றுக்கொள்வதிலே. தனிச் சுவை இருக்கிறது.

தட்க்கை நீட்டி இங்கொருவர்
தருக வென்னார் விடுதலையை!
உடனே உணர்ந்து வதைத்தோரும்
வழங்கிவிட்ட சான்றில்லை!
அடலே! புயலே! எரிமலையே!
ஆர்க்கவருதல் உரிமையாம்
கடலாய் ஆற்றல் தோள் புனைவாய்
கண்ணாய் வளர்ப்பாய் விடுதலைத்தீ.

அண்ணன்,

அண்ணாதுரை

மலர் 20] ஆண்டு சந்தா ரூ. 8 (17—6—62) தனிப்பிரதி 16 காசு [இதழ் 42

தெரிந்தவர்களுக்கே புரியாதது!

1965-ம் ஆண்டுக்குப் பின்னரும் ஆங்கிலமே அரசாங்க மொழியாக இருக்கவேண்டும் என்ற மசோதா ஒன்றை 343(3) விதியின்படி விரைவில் பாராளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்ற அரசாங்கம் முடிவு செய்திருக்கிறதென்ற, ஒரு தேவையும் அவசியமுமான செய்தியை உள்துறை அமைச்சர் தத்தார் அவர்கள் மக்கள் சபையில் அறிவித்துள்ளார்.

இது, நாம் நீண்டகாலமாகவே சொல்லிவரும் ஒரு உண்மையாகும். ஆங்கிலத்திற்குப் பதில் அந்த இடத்தில் வேறு எந்த மொழியைக் கொண்டுவந்து நிறுத்தினாலும், அது, ஆங்கிலமொழி செய்யும் வேலையைச் செய்யாது — செய்ய முடியாதென்பதை முன்கூட்டி அறிந்தே மொழி நூல் வல்லுநர் பலரும் ஆங்கிலமே அந்த இடத்தை நிறைவு செய்ய முடியும் என்று கூறி வருகின்றனர்.

என்றபோதிலும், சுயராச்சியம் கிடைத்துவிட்டால், அதன்பிறகு, ஆங்கிலம் இந்நாட்டில் இருக்காது —இருக்கமுடியாது— இருக்க விடமாட்டோம் என்று மார்தட்டியவர்கள் சிலர் இன்னும் இருக்கிறார்கள். பலர் உண்மையை உணர்ந்து மாறியும்விட்டார்கள்.

ஆங்கிலேயனோடு ஆங்கிலமும் கப்பல் ஏறவேண்டியதுதான் என்று ஆர்ப்பரித்தவர்களுக்குத், திரு. தத்தார் கொண்டுவர இருக்கும் ஆங்கில நீடிப்பு மசோதா ஒரு பேரிடியாக இருக்கலாம்.

ஆனால், ஆங்கிலத்தின் உயிர்த் தன்மையையும், ஆங்கிலத்திற்குப்பதில் அந்தஇடத்தில்அமர்த்தவிரும்பும் இந்தியின் உயிரற்ற—உபயோகமற்ற தன்மையையும் உணர்பவர்களும் இல்லாமலில்லை.

இந்தப் பேருண்மையை மெய்ப்பிக்கும் வகையில் பண்டித நேரு அவர்கள் ஒரு சுவையான செய்தியை அறிவித்துள்ளார்.

சொல்லிவைத்தற்போல் உள்துறை அமைச்சரின் ஆங்கில நீடிப்பு மசோதாச் செய்தியும்; பண்டித நேரு அவர்களின் சுவைமிக்க செய்தியும் ஒரே நாளில் (13—6—62-ல்) வெளிவந்துள்ளன.

வானொலியில் உபயோகப்படுத்தப்படும் இந்தி பற்றிய கேள்விகள் சிலவற்றை நிருபர்கள் முதலமைச்சரிடம் கேட்டிருக்கிறார்கள்.

வானொலியில் பயன்படுத்தப்படும் இந்தி மிகக் கடுமையாக இருப்பதால், அதனை எளிதாக்கும் முயற்சி பற்றிய தங்கள் கருத்து என்ன என்று நிருபர்கள் கேட்டதற்கு,

> "இந்த முயற்சிபற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. ஆனால், வானொலியில் உபயோகிக்கும் இந்தி பற்றி எனக்கு மிகுந்த வெறுப்புண்டு."

என்று கூறியதோடு அவர் நின்றுவிடவில்லை. இந்தி மொழியின்பால் அவருக்குள்ள வெறுப்பு எந்த அளவு உச்ச நிலையை அடைந்துள்ளதென்பதை மேலும் சில சொற்களால் விளக்கியுள்ளார்.

> "இந்தி ஓரளவு நன்றாகத் தெரியும் என்று கருதும் எனக்கே வானொலியில் பேசும் இந்தி புரிவதில்லை."

என்று நேரு அவர்கள் தமது உள்ளக் கருத்தை உள்ளபடியே எடுத்துக் கூறியிருக்கிறார்.

நன்றாகப் பேசத் தெரிந்தவருக்கே புரியாத இந்தி.

அப்படிப்பட்ட ஒரு இந்தியை இத்துணைக் கண்டம் முழுவதிலும் இருக்கின்ற மக்கள் புரிந்து, அது என்ன கூறுகின்றது என்பதனைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று வானொலி நிலையத்தார் அந்தப் பணியை விடாது செய்துவருகின்றனர்.

இதுபற்றியும் நிருபர்கள் முதலமைச்சரிடம் கேட்டிருக்கிறார்கள்.

> "வானொலி ஒலிபரப்புத்துறை அமைச்சராக இருந்து, கடந்த பத்தாண்டுகளாகப் பணியாற்றிய டாக்டர் கேஸ்கர் அவர்களின் இந்தப் புரியா இந்திப் பிரசாரத்தை எப்படிப் பொறுத்துக்கொண்டு இருந்தீர்கள்?"

என்று கேட்டதற்கு,

> "ஓ! அதுவா? நாம் எல்லாரும் மிகுந்த சகிப்புத்தன்மை வாய்ந்தவர்களாயிற்றே!"

என்று முதலமைச்சர் புன்னகை கலந்த பதிலை அளித்திருக்கிறார்.

பத்தாண்டுகளுக்கு மேலாகவே யாருக்கும் புரியாத முறையில் ஒரு மொழி வானொலி மூலம் பரப்பப்படுகிறது. அதிலும் ஓரளவு நன்றாகப் பேசத் தெரிந்தவர்களுக்கே புரியாதபடி ஒலி பரப்பப்படுகிறது என்றால், இதற்கு, உண்மையிலே பண்டித நேரு அவர்கள் குறிப்பிட்டதைப்போல் மிகுந்த அளவுக்குச் சகிப்புத் தன்மை தேவைதான்.

தெரிந்தவர்களுக்கும் புரியாது; தெரியாதவர்களுக்கும் விளங்காது. இப்படிப்பட்ட ஒரு மொழியை இந்நாட்டின் பொது மொழியாக ஆக்க முயல்கிறார்களே சிலர், அவர்களிடம் உண்மையிலேயே சிறிதளவுகூடச் சகிப்புத் தன்மை இல்லைப் போலும்!

எனவேதான், இயலாத ஒன்றை இழுத்துப் பிடித்துக்கொண்டு, விட்டேனா பார் என்று வீராப்புப் பேசுகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்குப் பண்டித நேரு அவர்களின் பதில் ஒரு பாடமாக அமையட்டும். O

2-ம் பக்கத் தொடர்ச்சி

அபூவை ஆஸ்திரேலியாவின் இரண்டாந்தரக் குடிமகன் என்று சொன்னாலே போதும். அது அவனை உயர்த்திவிடும். அவன் தான் குடிமகன் என்ற பட்டியலிலேயே வருவதில்லையே! வாக்குரிமை என்பது அவன் கேள்விப்படாத ஒன்றாயிற்றே! இங்கிலையில் நாட்டைப்பற்றி எதையாவது சொல்லி வைப்பது அவனால் முடிந்த காரியமா? அந்த நாட்டிலுள்ள எந்த உணவு விடுதிக்குள்ளும் அவனால் உரிமையோடு நுழையமுடியாது. குடிக்கவோ, உண்ணவோ தேவைப்பட்ட எதையும் அவனால் அங்கே வாங்கமுடியாது. வாங்கும் உரிமை அவனுக்கு அளிக்கப்படவில்லை. அப்படியே அவன் கட்டாயமாக அங்கே ஏதாவது வாங்கித்தான் ஆகவேண்டுமென்றால், அதற்காக அவன் தனியே அனுமதி பெற வேண்டும்.

வெள்ளையர் அவனிடம் இப்போது விற்பவை ஊசிப்போன உணவுப் பண்டம்; கெட்டுப்போன மது. மது —அந்தப் பழக்கமே இல்லாதிருந்த அந்த இனத்தை மிதமிஞ்சிய குடிவெறியில் ஆழ்த்திவிட்ட பெருமை வெள்ளை இனத்தைச் சேர்ந்தது தான்.

'பழங்குடி மக்களின் சமுதாய நலம்' என்ற பேச்சு இப்போது ஆஸ்திரேலியாவில் அடிபட்டு வருகிறது. உண்மையில் அந்தத் திட்டம் ஒரு கேலிக்கூத்து. அந்தத் திட்டத்தின் பெயரால் ஆண்டுதோறும் ஆஸ்திரேலிய அரசு ஒதுக்கும் தொகை இருபது இலட்சம் பவுன். அது எப்படிச் செலவிடப்படுகிறது என்பதுதான் ஒரு பெரிய வேடிக்கை. தோட்டத்திற் பாதி கிணறு என்றாற்போல், அந்த நிதியை நிர்வகிக்கும் வெள்ளையர்க்கே அதன் பெரும்பகுதி செலவிடப்பட்டுவிடுகிறது.

மேலும் சொல்லவேண்டுமானால், அந்தப் பழங்குடிமக்களின் சமுதாய நலம் ஒரு விந்தையான கட்டத்தை— உருவத்தை இப்போது அடைந்துள்ளது. எடுத்துக்காட்டாகக் குவீன்ஸ்லாந்துக்கு அந்தப் பழங்குடிமக்கள் குடிபெயர்க்கப்படுவதைச் சொல்லலாம். ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்கு முன்னே அந்த மக்களிற் பெரும்பகுதியினர் குவீன்ஸ்லாந்துக்குக் குடிபெயர்க்கப்பட்டனர். அங்கே நடைமுறைகளைக் கண்காணிக்கும் பொறுப்பும், எல்லாவற்றையும் நிர்வகிக்கும் பொறுப்பும் தகுதிபடைத்த ஒருவரிடம் ஒப்படைக்கப்படவில்லை. நிர்வாக அறிவே இல்லாத, பொறுப்பு என்பதை உணர்ந்து செயலாற்றத் தெரியாத ஒருவனிடம் அந்த மக்கள் அங்கே ஒப்படைக்கப்பட்டனர்.

அவன் அந்த மக்களை முழுக்க முழுக்கத் தன் ஆளுகைக்குள் கொண்டுவந்து தடியாட்சி நடத்த முனைந்தான். அங்கு அவன் வைத்ததே சட்டம்; சொன்னதே நியாயம். அங்கே கண்ணுக்கு எடுப்பாகத் தென்பட்ட கன்னியர் எல்லாம் அந்தத் தடியாட்சிக்காரனுக்குக் கணிகையராயினர். அலுவல் தீர்ந்ததும் அவர்கள் துரத்தப்பட்டனர்; கொடுமைபடுத்தப்பட்டனர்; சிறையிலடைக்கப்பட்டனர். இப்படி இருபது ஆண்டுகள் அவன் அங்கே அகம்பாவ ஆட்சி நடத்திக்கொண்டு வருகிறான்.

வெளிநாட்டிலிருந்து யாரேனும் ஒருவர் குவீன்ஸ்லாந்தை திடுதிப்பென்று போய்ப் பார்த்தால்கூட அந்தப் பகுதியின் ஏறுமாறான நிலையினை எடுத்த எடுப்பில் துல்லியமாகச் சொல்லிவிடலாம். அந்தப் பகுதி ஒரு பிரமாண்டமான அடிமைக் கொட்டில். அந்த மாபெரும் அடிமைக் கொட்டில் வெள்ளையரின் நன்மைக்காக, வாழ்வுக்காக நடத்தப்படுகிறது. இந்தக் கருத்துக்கு மாற்றுக் கருத்து யாராலும் சொல்ல முடியாது.

நடைமுறையையும், இயற்கை நிலையையும் வைத்து அபூ தன்னைத் தானே தாழ்த்திக் கொள்கிறான். அவன் எதற்காகவும் வருந்துவது கிடையாது, தளர்ச்சி எப்போதாவது அவன்பால் ஏற்பட்டாலும், அந்தத் தளர்ச்சியை அவனே ஆற்றிக்கொள்கிறான். அப்படி அவனுக்கு மிகப்பெரும் ஆறுதல் அளிப்பதில் ஒன்று அந்த நாட்டின் மது. அது வெறி மிக உண்டாக்குவது.

அபூவுக்கென்று ஒருதலைவன் கிடையாது. அப்படி ஒரு தலைவனை இப்போதைக்கு அபூக்களால் அடையவும் முடியாது. அபூக்களின் நன்மைக்கென்று அந்த இனத்தில் ஒரு தலைவன் தோன்றவேண்டுமானால், அதற்கு ஆஸ்திரேலிய அரசுதான் உதவி புரியவேண்டும். அந்த உதவி அந்த இனம் — அபூ இனம் — மிக மிகத் தாழ்வுற்று வறுமையினும் வறுமை மிஞ்சி, வருந்தி, உழன்று கொண்டு கிடக்கும் நிலையிலிருந்து மீட்சி பெற உதவும் உதவிதான். கடந்த காலக் கண்மூடித் தனத்தில் இன்னும் சிக்கிச் சீரழிந்து தடுமாறிக் கொண்டிருக்கும் அபூவை, இருபதாம் நூற்றாண்டின் நவயுக வாழ்வுக்குள் கொண்டுவந்து தள்ளும் உதவி தான்.

இன்றைய ஆஸ்திரேலிய அரசை மன இளக்கம் அல்லது இரக்கம் கொண்ட அரசு என்று சொல்லமுடியாது. அது சிறுபான்மையோரிடத்துப் பெருமனப்பான்மையோடு நடந்துகொள்ளும் அரசு அல்ல. சிறுபான்மையோரின் உரிமையை அவரிடமே விட்டுக்கொடுக்கும் நல்ல மனம் உடையது என்றும் அதனைச் சொல்லமுடியாது. அன்னோர்க்கு வாக்குரிமை வழங்கவேண்டும் என்ற எண்ணமே அதனிடம் இல்லை.

உள்நோக்க மனப்பான்மையை ஒருபுறம் மறைத்துவிட்டுப் பார்த்தால்கூட அந்நாட்டில் கறுப்பரை வெள்ளையன் ஒதுக்கி, ஒதுக்கித் தூரத் தூரத் தள்ளித் தள்ளிக் கொண்டுதான் போகிறான். ஆனால் அங்குள்ள கறுப்பனோ, மெல்ல மெல்ல வெளுப்படைந்துகொண்டு வருகிறான். காரணம் எவ்வளவு தான் கறுப்பனை வெள்ளையர் வெறுத்து ஒதுக்கினாலும், அவனுடைய உடன் பிறப்புகளிடம்— கறுப்புப் பெண்களிடம் — அவன் இணங்கிப் போய்விடுவதையே மேற்கொண்டுள்ளான்.

எனவே, நிறம் மாறிக்கொண்டு வருகிறது. நிறம் மாறிக்கொண்டு வந்து என்ன பயன்? அவனை இவன் நடத்தும் முறை, அவனைப்பற்றி எண்ணும் எண்ணம், அவனிடம் காட்டும் பரிவற்ற போக்கு, முரட்டுச் செய்கை—இன்னும் மாறவில்லையே! அப்படியேதானே இருக்கின்றன!

ஆஸ்திரேலியா தன் வசம் பெரியதொரு சிக்கலை வைத்துக்கொண்டிருக்கிறது. அந்தச் சிக்கல், மாபெரும் ஈக்கூட்டத்துக்கிடையே ஒதுக்கப்பட்டுள்ள சாதியென்னும் சிக்கல். அந்த அபூ இனத்தை இதே நிலையில் உழலவிட்டு வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பது மாபெரும் கொடுமை. அதற்குப் பதில் அந்த இனத்தைச் சுட்டு வீழ்த்திப் பொசுக்கிக்கூடவிடலாம். அது அன்பு காட்டுவதாகக்கூட அமையும்.

(இப்படிக் கூறும் கென்னத் குக் என்பாரும் வெள்ளையர்தான். வாழ்க அவர்தம் பெருநோக்கு! வாழ்க அவர்தம் மனச்சான்று!)

★

"நாவை அறுத்துவிடு!"

—[பெ. கலையரசன்]—

பேரிடியும் பெருமழையும் பெய்து ஓய்ந்தது. எங்கும் அமைதி நிலவிற்று. வானில் ஒரு பகுதியில் இருந்து "பளீர்! பளீர்!!" என்று மின்னின. அதைத் தொடர்ந்து இடியோசையும் எழுந்தது. தவளைகளெல்லாம் தனக்கேயுரித்தான 'டகர' ஒலியை முழக்கின. ஒருவாறாக மின்னலும் இடியும் ஓய்ந்தன.

ஆனால்!

பெய்தமழை ஓய்ந்தும்கூட 'எழில் நாட்டு' மக்கள் ஒருவரும் வெளியில் நடமாடவில்லை. அணிமணிகள் விற்கும் அங்காடிகள் அடைக்கப்பட்டிருந்தன. அலுவலகங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. சுருங்கச் சொல்லின், எழில்நாடே களையிழந்து காணப்பட்டது.

உண்மைதான்! எழில் நாட்டை அழகு செய்யும் மக்கள் யாவரும் அகத்துள்ளே அடைந்து கிடப்பதால் ஏற்பட்ட அவலநிலைதான் இது. சாலைகளில் மக்கள் நடமாட்டம் இல்லை. ஆனால்! வில், வேல், வாளேந்திய அரசாங்கக் காவலர்கள் உலாவந்தனர். எழில்நாட்டு எல்லைக்குள் எத்தொழிலும் இயங்கவில்லை. கழனிக்குச் செல்லும் உழவன் கலப்பை தூக்கவில்லை, காடு திருத்தும் பாட்டாளி மண் வெட்டி எடுக்கவில்லை. கஞ்சிக்கலயம் சுமந்து செல்லும் கன்னியர்கள் கழனிநோக்கிச் செல்லவில்லை. இதற்கெல்லாம் காரணம் யார் தெரியுமா? எழில் நாட்டு மன்னன் 'இரும்பன்'தான்.

அமைதியாக இருந்த எழில்நாட்டு மக்கள்மேல் அதிகவரியைப்போட்டு அவதிக்குள்ளாக்கினான். அதோடல்லாமல், தொன்றுதொட்டுக் காத்து வந்த தொன்மை மொழியாம் தூய மொழி, அம்மொழிக்கு இழுக்குத் தேடினான். பாரோர் புகழ்ந்து பாராட்டக் கூடிய பண்பாடு. அப்பண்பாட்டைப் பாழ்படுத்தும் வகையில் நடந்துகொண்டான். அதோடு விடவில்லை. ஒருமைப்பாடு என்ற பெயரில் பிறமொழி பேசும் பிற இனத்தானுடன் கூடிவாழவேண்டுமென்று வற்புறுத்தினான். இதைக் காணச் சகியாத எழில்நாட்டு மக்கள் பொங்கியெழுந்தனர், புரட்சித் தீ புகைய ஆரம்பித்தது.

எங்கு நோக்கினும் 'வேலை நிறுத்தம்' என்ற குரல் ஒலிக்கத் தொடங்கிற்று. ஆசிரியர்கள் பள்ளிக்குச் செல்லவில்லை. அங்காடி உரிமையாளர்கள் அங்காடி திறக்கவில்லை. அலுவலகங்கள் மூடப்பட்டன. இந்நிலையைக்கண்ட மன்னன், காவலர்களை ஏவிவிட்டுக் காட்டுத்தர்பார் புரிந்தான்.

எழுந்த புரட்சித்தீ அணையவில்லை. குமுறும் எரிமலைபோல் கொதித்து எழுந்தனர். பொங்கிளிக்கும் கடல்போல் பொங்கினர். இந்நிலையைக் கண்டு ஐயுற்ற மன்னன் அண்டை நாட்டிலிருந்து படைகளைக்கொண்டு வந்தான். அடக்குமுறையை அவிழ்த்துவிட்டான். 'நாடடங்குச் சட்டம்' என்று நாடெங்கும் பறை சாற்றினான்; 'எழில்நாட்டு மக்கள் எவரும் வெளியில் வரக்கூடாது' என்று எச்சரித்துவிட்டான். அதனால்தான் சாலைகளில் மக்கள் நடமாட்டம் இல்லை. அங்காடிகள் அடைக்கப்பட்டிருந்தன. அலுவலகங்கள் மூடப்பட்டிருந்தன. எங்கும் புரட்சி எழாமலிருக்க ஆயுதம் தாங்கிய காவலர்கள் அங்குமிங்கும் நடந்தவண்ணமிருந்தனர்.

அந்நேரம்!

எழில்நாட்டு விடுதலை இயக்கத்தின் தலைவனான தன்னலம்மறந்தான் மக்களையழைத்து நாட்டின் நிலைமைபற்றியும் நாடடங்குச் சட்டத்தைப்பற்றியும், உரிமை பறிக்கப்படுவதுபற்றியும், பேசுவதத்காக கொஞ்சம் உயரமான மேடையிலேறிப் பேசினான். "என்னருமை எழில் நாட்டு மக்களே! நாமெல்லாரும்நாடடங்குச்சட்டத்தால் பாதிக்கப்பட்டுத் தண்ணீருக்குள் கிடக்கின்ற ஆமைபோல் வீட்டுக்குள் அடங்கிக் கிடக்கின்றோம். இந்நிலை நீடிக்குமானால், நம்நிலை என்ன ஆகும்? என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். நாமும் நம்மைச் சுற்றியுள்ள தாய் தந்தையரும், மனைவி மக்களும், விவசாயப் பெருங்குடி மக்களும், தொழிலாளத் தோழர்களும் எப்படி உயிர்வாழ முடியும் என்பதை நினைத்துப் பாருங்கள்.

நாமென்ன களஞ்சியத்திலிருந்து எடுத்துச்சாப்பிடுபவர்களா? இல்லை! நாள்தோறும் உழைப்பதால் வரும் ஊதியத்தைக்கொண்டு சாப்பிடுபவர்கள். வெளியில் சென்றால் தானே உழைக்கமுடியும். உண்ண முடியும். இதுபோல் வீட்டுக்குள் உறைந்துகிடந்தால் நம் வயிறு கேட்குமா? நமது மனைவி மக்கள் பசி தீருமா? தீரவே தீராது! இந்நிலை மாறவேண்டுமானால் நாம் அனைவரும் கூடி நாடடங்குச் சட்டத்தை உடைத்தெறியவேண்டும். மக்கள் மேல் விதித்திருக்கும் வரிச்சுமையைக் குறைக்க வழிசெய்யவேண்டும். நம் உயிருக்கு நேரான நமது மொழி பாதுகாக்கப்படவேண்டும். தரணிபோற்றும் பண்பாடு தழைத்தோங்கச் செய்யவேண்டும். ஒரே இனமக்களான நாம் அனைவரும் ஒன்றாய் வாழவேண்டும். இதற்கெல்லாம் மன்னர் வழிவகை காணவிட்டால் நமது போராட்டம் தொடர்ந்து நடைபெறும் என்பதைத்தெரிவிக்க வேண்டும்" என்றான் தன்னலம் மறந்தான்,

அந்நேரம்!

மேடை நோக்கி வந்த சில காவலர்கள் "தன்னலம்மறந்தவனே! உன்னை விலங்கிட்டு அழைத்துவருமாறு மன்னர் ஆணையிட்டு இருக்கிறார்" என்றுகூறித் தன்னலம்மறந்தான் கையில் விலங்கை மாட்டினர். கூட்டத்திலிருந்த அனைவரும் கூக்குரலிட்டனர். கூக்குரலிட்ட மக்களை நோக்கித் தன்னலம்மறந்தான், "தோழர்களே அமைதியாக இருங்கள். அரசர் அழைத்துவரச்சொல்லி ஆணையிட்டு இருக்கிறார். சென்று வருகிறேன்" என்றான். காவலர்கள் அரண்மனை நோக்கி இழுத்துச் சென்றார்கள் தன்னலம்மறந்தானை.

தன்னலம்மறந்தான், எழில்நாட்டு அரசவைமுன் நிறுத்தப்பட்டான். அழகுமிகு அரியணையில் அமர்ந்திருந்தான், எழில்நாட்டரசன் இரும்பன். அமைச்சர் கணக்காயர் அத்

பதிவு எண். எம். 4642 | தொலைபேசி எண்.... அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

தனைபேரும் கூடியிருந்தனர். காவலர்கள் கைப்பிடியாய் பிடித்திருந்த தன்னலம்மறந்தானைப் பார்த்த மன்னன்,

"நீதான் புரட்சித் தலைவன் தன்னலம்மறந்தவனா?" என்றான்.

"ஆம் நானேதான்!" என்றான் தன்னலம்மறந்தான்.

"நாட்டங்குச் சட்டத்தை மீறிப் புரட்சிக் கருத்துக்களை பேசினாயாமே?"

"பேசினேன்"

"நீ பேசி ஒன்றும் பயனில்லை. என்னிடம் ஏராளமான படைகள் இருக்கின்றன. உங்களை அழித்து விட முடியும் என்னால்!"

"எங்களிடம் படைகள் இல்லை. உங்கள் படைகளையும் நீங்கள் போடுகின்ற தடைகளையும் உடைத்தெறியவல்ல கொள்கை வலிவு இருக்கின்றது எங்களிடம்"

"அரசாங்கத்தைத் தாக்கிப் பேசினாயாமே?

"ஆம்"

"பேசியது உன்னுடைய குற்றம் தானே?"

"இல்லை! என் நாவினுடைய குற்றம்"

"உன் நாவினுடைய குற்றமா? நாடடங்குச் சட்டத்தை மீறியது உன் நாவின் குற்றமா? நாட்டு மக்களிடம் புரட்சியைத் தூண்டிவிட்டது உன் நாவின் குற்றமா? யாரங்கே! நாட்டு மக்களிடம் புரட்சியைத் தூண்டிவிட்ட இவன் நாவைத் துண்டித்துவிடுங்கள். அரசாங்கம் விதித்த தடையை அவமதித்த இவன் நாவை அறுத்துவிடுங்கள்" என்றான் மன்னன். உடனே இரு காவலர்கள் விரைந்துவந்து இழுத்துச் சென்றார்கள் தன்னலம்மறந்தவனை.

சிறிது நேரத்திற்கெல்லாம் வெளியே அனுப்பப்பட்டான். ஆம்! நாட்டங்குச் சட்டத்தை உடைத்தெறிய வேண்டுமென்று பாடுபட்ட தன்னலம் மறந்தவனுடைய நாவை அறுத்துவிட்டார்கள். நாட்டு மக்கள் நல்வாழ்வில் நாட்டங்கொண்டவன் நாவை அறுத்துவிட்டார்கள். பண்பாடு காக்கப்படவேண்டுமென்று பறை யறைந்தவன் நாவைப் பாழாக்கி விட்டார்கள். வரிச்சுமை குறைக்கப் பட வேண்டுமென்று வற்புறுத்திய வன் நாவை வன்கணாளர்கள் அறுத்துவிட்டார்கள். வாயிலிருந்து வழியும் குருதியோடு அரண்மனை வாயிலிலிருந்து வெளியே வந்தான் தன்னலம் மறந்தான்.

குருதி சொட்டச் சொட்ட அரண்மனையிலிருந்து வெளியே வந்த தன்னலம்மறந்தானைக் கண்ட புரட்சிக் கூட்டத்தார், "ஐயோ! என்ன கொடுமை இது? என்ன நடந்தது!" என்று கட்டிப் பிடித்து கண்ணீர் விட்டனர். கதறி அழுதனர். ஏதும் பேசமுடியவில்லை அவனால். எப்படிப்பேசுவான்? நாட்டு மக்கள் நலனுக்காகப் பாடுபட்ட நல்லவன் நாவைத்தான் அறுத்து விட்டார்களே கொடியவர்கள்! எப்படிப் பேசமுடியும்? நண்பர்கள் கேட்கும் கேள்விகளுக்கு எப்படிப் பதில் சொல்லமுடியும்? எதையும் சொல்ல முடியாதவனாய்ச் சிலைபோல்நின்றான் தன்னலம் மறந்தான்.

"நண்பனே! என்ன நடந்தது? சொல்லு நண்பா சொல்லு." என்று கெஞ்சிக் கேட்டனர் புரட்சிக் கூட்டத்தார். வாயைத்திறந்து காட்டினான். 'நா' அறுக்கப்பட்டிருப்பது கண்டு, "ஐயோ! தன்னலம் மறந்தவனே! உனக்கா இந்த நிலை? உன் நாவையா அறுத்துவிட்டார்கள்? 'கோல் வன்மையும், வாள் வன்மையும் கொண்டு கொடுமைப்படுத்தினால், நாவன்மையால் நாட்டில் நல்லாட்சி ஏற்படுத்தலாம்' என்று சொன்ன உன் நாவையா அறுத்து விட்டார்கள்? ஐயோ! கொடுமையிலும் கொடுமை இது. சகிக்க முடியாத கொடுமை. ஒருவன் நாவை அறுத்துவிட்டதால் புரட்சித் தீ அணைந்துவிடும்' என்று எண்ணிவிட்டார்கள் போலும்! ஆளவந்தோனே! பார். ஒருவன் நாவை அறுத்ததால் ஊறிக் கிடக்கின்ற புரட்சிக் கருத்து ஒழிந்துவிடும் என்று நினைத்தாயோ? ஒழியவே ஒழியாது. நாட்டு மக்களே! இந்த நல்லவன் நாஅறுக்கக்கண்டும் நாம் வாளா இருந்துவிடக் கூடாது. புறப்படுங்கள் களம் நோக்கி! புல்லர்களுக்குப் புத்தி புகட்டுவோம். நல்லவர்களுக்கு வாழ்வளிப்போம்" என்று முழங்கிய புரட்சிக் கூட்டத்தார் தன்னலம் மறந்தானை அழைத்துக்கொண்டு நாட்டு மக்களிடம் காட்டிப் படை திரட்டச் சென்றனர்.

படை திரண்டது! வேல்தாங்கி, வாள் தாங்கி, விழியிலே வீரக்கனல் தாங்கி விரைந்தது மறவர் படை—அரண்மனை நோக்கி! ஆடவரும் பெண்டிரும் அணியணியாகச் சென்றனர் அரண்மனை நோக்கி! புரட்சிக் கூட்டத்தாரின் பொலிவுமிகு கருத்துக்கு புத்துயிர் பிறந்தது அன்று தான்.

எழில் நாட்டு மக்கள் எழுச்சியுற்ற செய்தியைக் கேட்ட மன்னன் மறைந்துவிட்டான். நாமினி இங்கிருத்தலாகாது என்றெண்ணிச் சுரங்கப் பாதையின் வழியாக எங்கோ ஓடிவிட்டான். யாவர் கண்களிலும் படாமல் மறைந்துவிட்டான்.

ஆவேசங்கொண்ட புரட்சிப்படை அரண்மனையைச் சென்றடைந்தது. அரியணையில் மன்னன் இல்லை. அவன் சூட்டியிருந்த முடியும், உறை வாளுந்தான் அரியணையில் இருந்தது.

கண்டனர் புரட்சிக் கூட்டத்தார். "மன்னன் எங்கோ சென்று மறைந்துவிட்டான்" என்றனர் அரண்மனைக் காவலர்கள் மன்னனைக் காணவில்லை என்றறிந்த தன்னலம் மறந்தான்; முன்னே வந்து நின்று இரு கைகளையும் உயரத் தூக்கி ஏதோ சொல்ல நினைத்தான். ஆனால், அவனுக்குத்தான நாவில்லையே. அவன் கூற நினைத்ததைக் கூறினர் கூடியிருந்த கூட்டத்தினர், ஆம்! "கொடுங்கோலரசு வீழ்ந்தது. குடியாட்சி மலர்ந்தது" என்று கூறினர். இதைத்தான் அவன் சொல்ல நினைத்தான். ❋

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.